Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட


FedEx Express®

திருமுருகன் கொம் நெற்


259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 25 (05.04.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:188



# இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு வாய்ப்பில்லை!



## வைகோவிடம் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையுடன் எந்தவொரு பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் இந்தியா செய்துகொள்ள வாய்ப்பே இல்லையென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இந்திய அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் என்னிடம் தெரிவித்துள்ளார்.


அத்துடன், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகாணப்பட வேண்டும் என்று மன்மோகன் சிங் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - கடந்த மார்ச் 28 ஆம் திகதி மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ - இலங்கையுடன் எந்த இராணுவ ஒப்பந்தமும் ஏற்படாதென்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தன்னிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

# ஜேர்மனியில் தேவாலயத்துக்குள் தமிழ்ப் பெண் வெட்டிக் கொலை!

1 

2 

3 

1) கொலையாளியை பொலிஸார் பிடித்துச் செல்கின்றனர். 2) கொலை நடந்த இடம். 3) பாதுகாப்பில் ஜேர்மன் பொலிஸார்.

(ஸ்டுட்காட்)

ஜேர்மனியின் ஸ்டுட்காட் நகரில் தேவலாயம் ஒன்றில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த ஈழத் தமிழர்களை புளொட் உறுப்பினர் ஒருவர் கண்மூடித்தனமாக வாளால் வெட்டியதில் உடுப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை (உள்ளூர் நேரப்படி) 3.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

ஜேர்மனியின் தெற்குப் பகுதியிலுள்ள - ஈழத்தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் ஸ்டுட்காட் நகரின் ஸுபென்ஹசென் பகுதியில் அல்லலோயா எனப்படும் - மெதடிஸ்த திருச்சபையின் தேவாலயம் ஒன்றில் சுமார் 65 தமிழர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 'அன்பு சமாதானத்தை வழங்கும்'

## பாப்பரசரின் கடைசிச் செய்தி!



(வத்திக்கான்)

"அன்பு இதயங்களை மாற்றும் சமாதானத்தை வழங்கும்" என்று மக்களுக்கு தான் வழங்கிய கடைசிச் செய்தியில் பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் தெரிவித்துள்ளார்.

மறைந்த பாப்பரசரின் ஆத்ம சாந்திக்காக வத்திக்கானில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் அவரது கடைசிச் செய்தியை அவரது உதவியாளரான பேராயர் லியோனார்டோ சான்ட்ரி வாசித்தார்.

"அன்பு இதயங்களை மாற்றும், சமாதானத்தை மற்றவர்களுக்கு வழங்கும்."

மனிதகுலம் சில நேரங்களில் தீமையின் சக்திக்கு ஆட்பட்டு சுயநலத்துக்கும், அச்சத்துக்கும் இரையாகிவிடுவதாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு உயிர்த்த இயேசு தன் அன்பைப் பொழிவதன் மூலம் மன்னிப்பை வழங்குகிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு தொழிற்பயிற்சி பிரிவு

# மக்கள் தீர்மானிக்கும் போது

உடுப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒரு [illegible] ஜேர்மனியின் தெற்குப் பகுதியி[illegible] (12 ஆம் பக்கம் பார்க்க) (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு தொழிற்பயிற்சி பிரிவு பணிப்பாளர் சுட்டுக் கொலை!

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

இந்துசமய விவகாரம் மற்றும் கிழக்கு தொழிற்பயிற்சி அமைச்சின் தொழிற்பயிற்சிப் பிரிவுப் பணிப்பாளர் தி.கைலைநாதன் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் மட்டக்களப்பில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்பிலிருந்து பணி நிமிர்த்தமாக மட்டக்களப்பு - மஞ்சத்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அவர் வந்தபோதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர் அலுவலகத்தில் மதிய உணவு அருந்திக்கொண்டிருந்த போது பின்வழியாக வந்த இரு துப்பாக்கி நபர்கள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்து விட்டு தப்பிச்சென்றனர்.

காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் தீர்மானிக்கும் போது யுத்தத்துக்குச் செல்ல தயார்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

நாம் பொறுத்தது போதும் என்று மக்கள் தீர்மானிக்கும்போது, அரசாங்கம் யுத்தத்துக்குச் செல்லத் தயாராகவிருப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க - 'லக்பிம' சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்தத்துக்குப் பின்னர், புலிகள் விமான ஓடுபாதையுடன் கூடிய புதிய முகாமில் இலகுரக விமானங்களை வைத்திருப்பது அரசாங்கத்துக்குப் பிரச்சினையாக இருந்தாலும், மீண்டும் யுத்தத்துக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் தொலைபேசிகளை புலிகள் ஒட்டுக்கேட்கின்றனராம்!

## இராணுவப் புலனாய்வுத்துறை தகவல்

(கொழும்பு)

அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகள் மூலம் - பாதுகாப்பு உயர் மட்ட தொலைபேசி உரையாடல்களை விடுதலைப் புலிகள் ஒட்டுக்கேட்டு வருவதாக - இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்திருப்பதாக கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வெளிநாடுகளின் உதவியுடன் பெற்றுக்கொண்ட - மிகவும் சக்திவாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகள் மூலம் இராணுவ முகாம்கள் உட்பட அரச (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சண்டைக்குத் தயாராயிட்டம் எண்டதை சொல்லிக்காட்டுறார் பாருங்கோ...!

# காவல்துறை உறுப்பினர்களின் பயணத்துக்கு அனுமதி மறுப்பு!

தமிழீழக் காவற்துறை உறுப்பினர்கள் 70 பேர் - வன்னியிலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்கு பாதுகாப்பு வழங்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை அரசு நிராகரிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் தரப்பின் இந்தக் கோரிக்கை முதலாம் திகதி விடுக்கப்பட்டிருந்தது. மறுநாள் பயணத்தைத் தொடர்வதற்காகவே இவர்களுக்கு பாதுகாப்பு அனுமதி கோரப்பட்டிருந்தது.

ஆனால் அரச தரப்பிலிருந்து அனுமதி மறுக்கப்பட்டதால் இவர்களின் பயணம் தடைப்பட்டதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (தே)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வெள்ளியன்று துயர் பகிருமாறு பொதுஅமைப்புகள் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

உலக கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி யாத்திரை தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை, யாழ். குடாநாட்டின் பொது அமைப்புக்கள் மற்றும் பொது நிறுனங்கள் கறுப்புக் கொடிகளை பறக்க விட்டும், கறுப்பு பட்டிகளை அணிந்தும் பாப்பரசரின் இழப்பின் துயரை கத்தோலிக்க மக்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்ரர் - மரத்துடன் மோதியதில் இயக்கச்சியில் 4 பேர் காயம்

இயக்கச்சிப்பகுதியில் வேகமாக சென்ற கன்ரர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் 4 பேர் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது -

பளை பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காக 10 இளைஞர்கள் கிளிநொச்சியிலிருந்து பளை நோக்கி கன்ரர் வாகனத்தில் வந்து கொண்டிருந்த வேளை, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நின்ற மரத்துடன் கன்ரர் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவத்தில் கன்ரர் வாகனத்தில் சென்ற 4 பேர் காயமடைந்து பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் கிளிநொச்சியை சேர்ந்த இ. சதானந்தன் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அதிகார சபை, சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டம் ஒன்று ஆரம்பித்துள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் கடன் திட்டத்தில் 85000 வரை கடனாக பெற முடியும் எனவும், இதற்காக 8% வட்டி அறவிடப்பட்டு 60 மாத தவணைகளில் செலுத்தி முடிக்க வேண்டும்.

முதற் கட்டமாக இக் கடனானது ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுடனும் ஒரு முகாமையாளருக்கும், ஒரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

அடுத்த கட்டங்களில் ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (44)

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் உயிரிழந்தோரின் நினைவாக வடமராட்சி கரப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிவகுமாரன் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக்கழக ஏ அணியும், இமையாணன் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக ஏ அணியும், நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து இமையாணன் விளையாட்டுக்கழக ஏ அணியும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, அச்சுவேலி வாலிபர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# கல்வியியற் கல்லூரி நடத்திய அழகெழல் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - நுண்கலைத்துறை மாணவர்களிடையே நடத்திய அழகெழல் போட்டி முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் - சித்திரப் போட்டியில் மட்டும் அதிகளவான மாணவர்கள் பங்குபற்றியதனால் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சித்திரப்போட்டியில் பரிசு பெறுவோர் - பிரிவு 4, 5 முதலாமிடம் பே. டினேசன் (யா/ஜோன்பொஸ்கோ), இரண் டாமிடம் சி.சிவமைந்தன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமி டம் ச.பொன்மாறன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி).

அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர் - ஆ. ஆன். அனுசியா (யா/திருக் குடும்பக் கன்னியர் மடம்), ஸ.கௌசல்யா (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), கு. துஷ்யந்தி (யா/ஜோன் பொஸ்கோ).

சிறப்புச் சான்றிதழ் பெறுவோர் - த.ஜெயதீஸ்வரன் (யா/இனுவில் மத்திய கல்லூரி), வி.மதியுகன் (யா/கோ சரவணபவானந்த வித்தியாலயம்), பா.பாலஜீவன் (யா/இனுவில் மத்திய கல்லூரி), த.தவகேசன் (யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), ச.ஜனனி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ம.இனியாள் (யா/மகாஜனக் கல்லூரி), இ.றுக்ஸ்மன் (யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), ந.இந்துசன் (யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்), து.மேதுஷா (யா/மகாஜனக் கல்லூரி).

(மிகுதி நாளை தொடரும்...)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தளபாடங்கள் அன்பளிப்பு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்படுத்தலுக்காக தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று இடம் பெற்றது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள திக்கம், தும்பளை கிழக்கு, கற்கோவளம் புனிதநகர் ஆகிய நலன்புரி நிலையங்களிலும் ஒரு குடும்பத்தில் மூன்று பேர் அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி கற்கும் 42 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தளபாடங்கள் வழங்கப்பட்டன. இங்கு ஒரு குடும்பத்துக்கு தலா 1 மேசை 4 கதிரை வீதம் வழங்கப்பட்டன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் நிவாரண பணித்திட்ட இணைப்பாளர் க.திருநீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் உபதலைவர் பேராசிரியர் பா. சிவநாதன் யாழ். மாவட்ட அரச அலுவலக கணக்காய்வு பகுதியை சேர்ந்த கே. கிரிதரன் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் தே.தேவானந்தா, கிராமசேவையாளர் எஸ். சிவசண்முகம் கடற்புலி உறுப்பினர் எஸ். அஜந்தன், கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் முத்திரைச் சந்தியில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

முத்திரைச் சந்திப் பகுதியில் இடம் பெற்ற வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்வண்டியும் - மோட் டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த ப.பாலமுகுந்தன் (வயது 34) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

திருநெல்வேலியிலிருந்து வன்னிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி யாழ்.நகர்நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்த வேளையே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் பஸ் வண்டியுடன் மோதியதால் தூக்கி வீசப்பட்டு தலையிலும், முதுகுப்பகுதியிலும் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

வெளிவாரி மருந்தாளர்களுக்கான பயிற்சி நெறியில் பங்கு பற்றிய பயிலுனர்களுக்கான ஒன்று கூடல், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. கேதீஸ்வரன் கலந்து கொள்கிறார்.

இந்த நிகழ்வில் 2003/2004ஆம் ஆண்டு வெளிவாரி மருந்தாளர்களாக பயிற்சி பெற்று வெளியேறிய பயிலுனர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# அண்ணா விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

(தொண்டமானாறு)

தொண்டமானாறு ஒற்றுமை விளையட்டுக் கழகத்தினால் சுனாமியால் உயிரிழந்தவர்களின் நினைவாக நடத்தப்படும் கரப்பந்தாட்ட செற்றப் சுற்றுப் போட்டியில் கெருடாவில் அண்ணா வியையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கரப்பந்தாட்ட செற்றப் போட்டிகள் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதி ஆட்டத்திற்கு கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகமும், பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகமும் தெரிவாகின. இதில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இந்தப் போட்டியில் நடுவர்களாக ம. வேதாபரணம், ஆ. பவானந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

# சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு ஐந்து லட்சம் செலவில் நிரந்தர வீடுகள்

## சர்வோதயம் அமைத்துக்கொடுக்கும்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் இரண்டு கிராமங்களைத் தெரிவுசெய்து அங்குள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 லட்சம் பெறுமதியான நிரந்தர வீட்டினைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

இந்த வீடுகளை அமைப்பதற்கும் பாதிக்கப்பட்ட கிராமங்களைத் தெரிவு செய்வதற்கும், புதிய வீடுகளை அமைப்பதற்கான அரச காணிகளைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் கடற்றொழில் சங்கங்களினாலும், கிராம சேவகர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காணிகள் தெரிவு செய்யப்பட்டதும் வீடுகளை இழந்த மக்களுக்கு உடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, சென்ற மாதம் சர்வோதயம் சீட்ஸ் அமைப்பின் மூலம் சுழிபுரம், உடுப்பிட்டி, கெருடாவில், யாழ். நகரை அண்டிய சில பகுதிகளிலுள்ள கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 110 குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் கடன் ஊக்குவிப்பு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.


## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தில் 1971ல் பிறந்த நட்சத்திரம் திருவாதிரை பிரபல கடை உரிமையாளரான மணமகளுக்கு மணமகன் தேவை.

(C/4011)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சரத்குமார் நமீதா வடிவேலு நடித்த
குளிரூட்டப்பட்டது
ஏய்
விரைவில் குருதேவா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
தமிழன்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக், நாசர், சத்தியராஜ், சிபி
பு.நே: 10.30, 2.30,
ஜோர்
(சி-3980) பு.நே: 6.30, 9.30

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
(சி-3978)
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரவிகிருஸ்ணா, நதீஷா நடித்த
சுக்கிரன்
(சி-3976)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், வடிவேலு, மும்தாஜ் நடித்த
லண்டன்
இயக்கம் - சுந்தர். சி
(சி-3979)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்லத்துரை மேரீதாசன்
(04/04/2005)

அறுபதிலும் அசையாத
இரும்பாய்,
உறவினர்க்கெல்லாம்
சுவையான கரும்பாய்,
நூறு ஆண்டுகள்
இன்பமாய் வாழ்ந்திடும்
பேறு கிடைத்திட
வாழ்த்துகின்றோம்.

நாகம்ஸ் பாம்,
வட்டு, இந்துக் கல்லூரி அருகாமை,
சித்தங்கேணி.
077-6654335
(C/4014)
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 65 வயதுக்கு மேற்பட்ட மருத்துவர்களுக்கு

# மீள் நியமனம் வழங்குவதை நிறுத்தினால்

# பதினைந்து வைத்தியசாலைகள் மூடப்படும்!

### பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**65 வயதுக்கு மேற்பட்ட மருத்துவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவதில்லை என்ற அரசின் தீர்மானம், சுகாதாரத்துறையில் நடைமுறைப் படுத்தப்பட்டால் – இங்கு 10 முதல் 15 வரையிலான வைத்தியசாலைகளுக்கு மூடுவிழா நடத்த நேரிடும்.**

**எனவே ஆறு லட்சம் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வைத்திய அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முன்வரவேண்டுமென யாழ்.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் - யாழ்.மாவட்டத்தில் மருத்துவ சேவைகளைப் பொறுத்தவரை யாழ். போதனா வைத்தியசாலை மூன்றாம் நிலைச் சேவைகளை வழங்கி வருகிறது. இந்த வைத்தியசாலை நேரடியாக மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது.

இதைவிட இந்த மாவட்டத்தில் முதல்நிலை, இரண்டாம் நிலை மருத்துவ சேவைகளை வழங்க 42 வைத்தியசாலைகள் உள்ளன. இவற்றில் யுத்த சூழலில் பாதிக்கப்பட்ட பலாலி, காங்கேசன்துறை, மண்டைதீவு, முள்ளியான் ஆகிய 4 வைத்தியசாலைகள் தவிர்ந்த, ஏனைய 38 வைத்தியசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

இவற்றில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை என்ற நிலையிலும் தெல்லிப்பளை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, வல்வெட்டித்துறை, நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகியன மாவட்ட வைத்தியசாலை என்ற நிலையிலும்- அச்சுவேலி, சங்கானை, கோப்பாய், காரைநகர், நயினாதீவு, அனலைதீவு ஆகியன சுற்றயல்கூறு வைத்தியசாலை என்ற நிலையிலும்- ஏனைய வைத்தியசாலைகள் கிராமிய வைத்தியசாலை, மத்திய மருந்தகமும் மகப்பேற்று விடுதியும், மத்திய மருந்தகம் ஆகிய நிலைகளிலும் இயங்குகின்றன.

இந்த வைத்தியசாலைகள் இந்த நிலைகளில் பெயரளவில் அழைக்கப்பட்டாலும், தமது நிலைக்குரிய சேவைகளை வழங்கமுடியாத நிலையிலேயே பெரும்பாலான வைத்தியசாலைகள் செயற்பட்டு வருகின்றன. இதற்கான மூலகாரணம் மருத்துவ ஆளணிப்பற்றாக்குறையே. குறிப்பாக மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமாதுக்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட தொழினுட்பவியலாளர்கள், எக்ஸ் – கதிர்ப்பட இயக்குநர்கள், சாரதிகள் என, பல்வேறு தரங்களிலும் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.

பெரும்பாலான வைத்தியசாலைகளில் போதிய உள்ளகக் கட்டமைப்பு, விடுதி வசதிகள் இருந்தும் தேவையான மருத்துவ ஆளணி இன்மையால் எதிர்பார்க்கப்படும் சேவையை வழங்கமுடியாத நிலையிலுள்ளன. எனவே, பெரும்பாலும் இவை நோயாளர்களை அனுமதித்து, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் அனுப்பிவைக்கும் இடமாற்ற மையங்களாகவே செயற்படுகின்றன.

மருத்துவ ஆளணிப் பற்றாக்குறையில் - மருத்துவர்களின் பற்றாக்குறையே இந்த வைத்தியசாலைகளிலுள்ள சேவைகளைப் பெரிதும் முடக்கியுள்ளன. யாழ்.மாவட்டத்தில் போதனா வைத்தியசாலைக்கு வெளியே 100 வைத்திய அதிகாரிகள் பணியாற்றவேண்டிய நிலையில் - தற்போது 9 வைத்திய அதிகாரிகள் மட்டுமே சேவையில் உள்ளனர். இந்த 9 பேரிலும் ஐவர் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைவிட மேலும் 6 வைத்திய அதிகாரிகள் மீள் நியமன அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் பதிவு/ உதவி மருத்துவ உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 58ஆக இருந்தும், தற்போது 17 பேர் மட்டுமே சேவையில் உள்ளனர். இவர்களைவிட மேலும் 30 பேர் மீள் நியமன அடிப்படையில் பணியாற்றுகின்றனர்.

அண்மையில் 65 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனம் வழங்குவதில்லையென ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் தற்போது மீள்நியமன அடிப்படையில் பணிபுரியும் 15 இற்கு மேற்பட்ட மருத்துவர்களின் மீள்நியமன சேவை கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தத் தீர்மானம் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகளுக்கு அமுல் நடத்தப்பட்டால், இந்த மாவட்டத்திலுள்ள 10 முதல் 15 வைத்தியசாலைகளுக்கு மூடுவிழா நடத்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்போம். எனவே, நாம் இந்த இக்கட்டான நிலையைச் சுட்டிக்காட்டிய பின்னர், தற்போது குறுகிய காலத்துக்கு மட்டும் மீள்நியமனம் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் குறிப்பாக 70, 80 களில் யாழ்.மாவட்டம் இலங்கையிலேயே மருத்துவ சேவைக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. ஆயிரக்கணக்கான மருத்துவர்களை இந்த மாவட்டம் பெற்று, வளர்த்து ஆளாக்கியது. ஆயினும், இந்த மாவட்டத்தில் தற்போது வாழும் மக்கள் மருத்துவ சேவையைப் பொறுவரை இந்த அவல நிலையில் வாழ்கின்றனர்.

யாழ். நகரப்பகுதியையும் அதனை அண்டியுள்ள பகுதியிலுள்ள மக்களும், யாழ்.போதனா வைத்தியசாலையினதும், நகரிலுள்ள தனியார் வைத்தியசாலைகளின் சேவைகளையும் பெறக்கூடியதாக உள்ளது. இந்த மாவட்டத்தின் ஏனைய பகுதியிலுள்ள மக்கள் பல்வேறு சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் யாழ்.போதனா வைத்தியசாலையை நாடிக் செல்ல வேண்டியுள்ளனர்.

இதனால் மூன்றாம்நிலை வைத்திய சேவைகளை வழங்க வேண்டிய போதனா வைத்தியசாலை - நெருக்கடியின் மத்தியில் இரண்டாம் நிலை சேவைகளையும் வழங்க தனது வளங்களை ஒதுக்க வேண்டியுள்ளது. ஏனைய 38 வைத்தியசாலைகளின் சேவைகளை மேம்படுத்தினால், போதனாவைத்தியசாலையின் இடநெருக்கடியைக் கணிசமான அளவு குறைக்கலாம்.

இன்று மருத்துவர்கள் பற்றாக்குறையால் யாழ்.மாவட்டத்தில் சில வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஒரே வைத்திய அதிகாரி 2 வைத்தியசாலைகளைப் பார்வையிடுவதால் சில வைத்தியசாலைகள் காலையிலும், சில மாலையிலும் இயங்குகின்றன. சில வைத்திய சாலைகள் ஒன்று விட்ட ஒரு நாள் திறக்கின்றன.

சில வைத்தியசாலைகளில் மருத்துவர் விடுமுறையில் செல்லும் போது, மாற்று ஏற்பாடு செய்ய வழியின்றி மூடப்படுகின்றன. குறிப்பாக தீவகப் பகுதிகளையும், வடமராட்சி கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளிலும் இந்த நிலைமை மோசமாக உள்ளது. இதற்கு மேலாகத் தற்போது யாழ். மாவட்டத்தில் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் ஒன்றுக்கேனும் நிரந்தர மருத்துவ அதிகாரி இல்லை என்பது வேதனையான நிதர்சனம்.

இதனால் தாய்சேய்நல சுகாதார சேவையும் நோய்த்தடுப்பு நடவடிக்கைக்காக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வெளியே 17 வைத்திய நிபுணர்கள் இங்குள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றவேண்டும். ஆனால் தற்போது இரண்டு வைத்திய நிபுணர்கள் மட்டுமே மீள்நியமன அடிப்படையில் சேவையாற்றிவருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை பல தடவைகளில் மத்திய மாகாண சுகாதார அமைச்சுகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு, இங்குள்ள வெற்றிடங்கள் காலத்துக்குக் காலம் மத்திய சுகாதார அமைச்சினால் நிரப்ப விண்ணப்பம் கோரப்பட்டபோதும் யாரும் இங்கு சேவையைச் செய்ய முன்வரவில்லை.

தற்போது மீண்டும் இந்தப் பிரச்சினையை நாம் மத்திய, மாகாண சுகாதார அமைச்சினால் யாழ்.மாவட்டத்திலுள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. ஏனைய வைத்தியசாலைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு வெகு விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

எனவே இந்த மாவட்டத்தில் வாழும் ஆறு லட்சம் மக்களின் அவல நிலையை மனதிற்கொண்டு இங்கு சேவையாற்ற வாருங்கள் என அன்பாக, பணிவாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நீண்ட காலம் சேவையாற்ற கஷ்டமுள்ளவர்கள், ஓரிரு வருடங்களுக்கேனும் பணியாற்றினாலே இந்த மாவட்ட மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும். இலங்கையின் எந்தப் பாகத்தில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளும் யாழ்.மாவட்டத்தில் தற்காலிக அடிப்படையில் உடனடியாக பணியாற்ற விரும்பினால், அதற்கான அனுமதியை வழங்க மத்திய, மாகாண சுகாதார அமைச்சுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

எனவே இந்த மாவட்டத்தில் சேவையாற்ற முன்வரும் வைத்திய அதிகாரிகள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டால், அதற்கான அனுமதியைப் பெற்றுத்தரலாம்.

உங்கள் சேவை சில வருடங்களாக இருப்பினும் அல்லது மாதங்களாக இருப்பினும் இந்த மாவட்ட மக்களைப் பொறுத்தவரை அது மகத்தானது, விலைமதிப்பற்றது. எனவே வாருங்கள் இந்த மாவட்ட மக்கள் உங்கள் சேவைக்காகக் காத்திருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எஸ்.பியை விடுதலை செய்ய அரச தரப்பில் சிலர் முயற்சி

(கொழும்பு)

சிறைவாசம் அனுபவித்தவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்காவை விடுவிப்பதற்கு ஆளும் தரப்பைச் சேர்ந்த சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமற்ற உறுப்பினர்கள் சிலர் எஸ்.பி.திஸநாய்க்கவை சிறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும். இதன் போது ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோருமாறு அவர்கள் திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்ததாகவும் தெரியவருகிறது.

எனினும் ஜனாதிபதியிடம் மன்னிப்புக்கோருவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸ நாயக்க இவர்களிடம் தெரிவித்திருப்பதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. இதேவேளை திஸநாயக்கவை விடுவிக்குமாறு கோரும் மனுவொன்றை பௌத்த மதத் துறவிகள் சிலர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)(தே)

## அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றையொன்று விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டும்!

### அனுரா பண்டாரநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகள் - ஒன்றையொன்று வெளிப்படையாக விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். நமக்குள் நிலவுகின்ற முரண்பாடுகளை நாமே உட்கார்ந்து பேசிக்கொள்வோம் என, முக்கிய அமைச்சரான அனுரா பண்டாரநாயக்க கோரியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியபோதே அவர் இந்த முரண்பாடுகள் குறித்து வெளிப்படையாக விபரித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

முரண்பாடுகளோடு மோதிக் கோண்டே இருந்தால் எப்படி நாட்டுக்கு நாம் சேவையாற்ற முடியும். கூட்டணியின் முக்கிய கட்சியான ஜே.வி.பியை சில துணை அமைச்சர்கள் விமர்சனம் செய்து, ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கிறார்கள்.

ஜே.வி.பி, அரசிலிருந்து வெளியேறிவிட்டால் அரசும் கவிழ்ந்துவிடும். அரசின் சக்கரங்களின் ஒன்றான ஜே.வி.பி கழன்று வெளியேறினால் நிலை என்னவாகும்?

இந்த உண்மையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 75 வீதமான உறுப்பினர்கள் புரிந்துகொண்டுள்ளனர். ஆனால், 25 வீதமானோர் புரிந்து கொள்ளவில்லை. இந்தப் புரிதலற்றவர்கள் தங்களது நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளாவிட்டால், மக்கள் அவர்களை அதிகார மையத்திலிருந்து வெளியேற்றுவர்.

இவ்வளவு முரண்கள் இருந்த போதும், எமது அரசானது ஐக்கிய தேசிய அரசைவிட வலுவானதே. முன்னைய ஐ.தே.க. அரசில் பலவீனமான தலைவராக ரணில் இருந்தார். கடந்த ஓராண்டு காலத்தில் நாடாளுமன்றத்தில் முக்கிய உரை ஒன்றைக்



கூட ரணில் நிகழ்த்தவில்லை.

அவர்களது முக்கிய நோக்கமே எஸ்.பி.திசநாயக்கவை சிறையிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்பதே. ஆனால் அது ஒருபோதும் நடக்காது.

எனது சகோதரியாகிய ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஒரு ஆலோசனை சொல்கிறேன். அவர் தனது நண்பர்களை நண்பர்களாகவே வைத்திருக்க வேண்டும். எதிரிகளாக உருவாக அனுமதிக்கக்கூடாது.

இதேவேளை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கூட்டணி அரசின் கடந்த ஓராண்டாக தொடர்ந்த முரண்பாடுகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

முரண்பாடுகளுடனே நாங்கள் ஆட்சி நடத்துகிறோம் என்ற வகையிலான அநுராவின் பிரகடனம் நகைப்புக்குரியதே என்று கொழும்பு அரசியல் நோக்கர்கள் கூறினர். (01)

## நிரந்தர வீடுகள் அற்றவர்களுக்கு அம்பாந்தோட்டையில் வீட்டுத்திட்டம்

(அம்பாந்தோட்டை)

சுனாமியால் அழிவடைந்த வீடுகளின் தொகையைப் போன்று இரு மடங்குகள் அதிகமான வீடுகள் அமைக்கும் செயற்திட்டம் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கென திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுனாமியால் அழிவடைந்த வீடுகளின்மொத்த அளவு 1485 ஆகும். பகுதி அளவில் மேலும் 1043 வீடுகள் சேதமடைந்துள்ளன.

பாதிப்புக்குள்ளான இந்த வீடுகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளின் தொகை 5543 ஆகும்.

இதன்படி சுனாமியால் அழிவடைந்த மக்களுக்கு புதிய வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 2528 வீடுகள் வழங்கப்படும் போது, மிகுதியாக 3015 வீடுகள் மேலதிகமாக உள்ளன.

இது குறித்து அம்பாந்தோட்டை மாவட்ட செயலர் எம். ஏ. பியசேன தெரிவிக் கையில் -

சில வீடுகளில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வசிக்கின்றன.

எனவே மேலதிகமாக உள்ள வீடுகளில் ஒரு தொகுதி அந்தக் குடும்பங்களுக்கும், ஏனையவை 100 மீற்றர் எல்லையில் இருந்து வெளியேற்றப் படவுள்ள குடும்பங்களுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (தே)

# இலங்கை அணிக்கு எதிராக நியூஸிலாந்து 267 ஓட்டங்கள்!



(நேப்பியார்)

இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 267 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று நேப்பியரில் ஆரம்பமான ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

கமிங் - ஜேம்ஸ் மார்ஷல் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக்



களமிறங்கினர். இருவரும் இணைந்து ஆடி அணியின் ஸ்கோர் 35ஐ எட்டிய போது முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

12 ஓட்டங்களைப் பெற்றிருந்த கமிங், ஆட்டமிழந்த பின்னர் ஹேமிஸ் மார்ஷல் களமிறங்கினார். மார்ஷல் ஜோடியின் அபார ஆட்டத்தால் அணியின் ஸ்கோர் வெகுவாக உயர்ந்தது.

ஸ்கோர் 142ஐ எட்டியபோது, ஜேம்ஸ் மார்ஷல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். உபுல் சந்தனவின் பந்துவீச்சில் இவர் ஆட்டமிழந்தார். பின்னர் அணித் தலைவர் பிளெமிங் மைதானத்துக்குள் நுழைந்தார்.

பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய இவரால் 16 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. 36 பந்துகளில் 16 ஓட்டங்களை எடுத்த இவர் மாலிங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து அஸ்ரில் களமிறங்கி, ஹேமிஸ் மார்ஷலுடன் இணைந்து



கொண்டார். இருவரும் அபாரமாக ஆடிக்கொண்டிருந்தநிலையில் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

84 ஓவர்களுடன் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, நியூஸிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 267 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஹேமிஸ் மார்ஷல் 206 பந்துகளில் 17 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 133 ஓட்டங்களுடனும், அஸ்ரில் 80 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்



களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் வாஸ், மாலிங்க, சந்தன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# இந்திய - இலங்கை தொடர் ஒத்திவைப்பு!

(மும்பை)

இந்திய-இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 ஒருநாள் போட்டிகளில் மோதுவதாக இருந்தது. ஆனால் இந்த மோதல் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக இந்திய கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் சுற்றுப்பயணங்களை முடிவுசெய்யும் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவில் கிரிக்கெட் சபை துணைத் தலைவர் தாஸ் குப்தா நிருபர்களிடம் கூறுகையில் -

சுற்றுப்பயணம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை எதையும் உறுதி செய்யவில்லை. எனவே நடக்க இருந்த இந்தப் போட்டி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# விளையாட்டு

# மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறுவதற்கு வாய்ப்பு!

தென்னாபிரிக்க அணியை முதல் இனிங்ஸில் 188 ஓட்டங்களுக்குள் சுருட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணி - தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதல் இனிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி - 5 விக்கெட் இழப்புக்கு 543 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இதன்பின்னர் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடியது. 16 ஓட்டங்களுக்குள் மூன்று விக்கெட்டுக்களை இழந்தது தென்னாபிரிக்க அணி.

சிமித் -2 ஓட்டங்களுடனும், கலிஸ், ரூடொல்ப் ஆகியோர் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தபின்னர் - களமிறங்கிய கிப்ஸும் 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

அடுத்ததாக டிவில்லியர்ஸுடன் பௌச்சர் இணைந்துகொண்டு சற்று நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்தார். எனினும் ஸ்கோர் 71ஆக இருந்தபோது 41 ஓட்டங்களுடன் டிவில்லியர்ஸ் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து களமிறங்கிய ஹோல் 2 ஓட்டங்களே எடுக்க, போயே களமிறக்கப்பட்டார். இவர் நிதான ஆட்டத்தின் மூலம் அணியின் ஸ்கோர் 158ஐ எட்ட உதவினார்.

34 ஓட்டங்களுடன் போயே ஆட்டமிழந்தபின்னர், என்ரினி 8 ஓட்டங்களுடனும், லாங்வெட் -10 ஓட்டங்களுடனும், பௌச்சர் 41 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

66.5 ஓவர்களிலேயே 188 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது தென்னாபிரிக்க அணி.

பந்துவீச்சில் கொலின்ஸ், பவல், கிங் ஆகியோா தலா 3 விக்கெட்டுக்களையும், டியோ நரைன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பலோ-ஒன் ஆன



தென்னாபிரிக்க அணியின் ஸ்கோர் 46ஆக இருந்தபோது, முதல் விக்கெட்டாக டிவில்லியர்ஸும், அடுத்து 34 ஓட்டங்களுடன் சிமித்தும் ஆட்டமிழந்தனர்.

ரூடொல்ப் 19 ஓட்டங்களுடனும், கலிஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்டிருந்தபோது நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

2 விக்கெட் இழப்புக்கு 85 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 270 ஓட்டங்களை இன்னும் எடுக்க வேண்டும்.

# இந்திய - பாகிஸ்தான் அணிகள்: இன்று இரண்டாவது பலப்பரீட்சை!



இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையேயான 2ஆவது ஒருநாள் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறவுள்ளது. இதற்காக இரு அணி வீரர்களும் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

முதல் ஒருநாள் ஆட்டத்தில் ஷேவாக், ராவிட் ஆகியோரது அபாரமான ஆட்டம் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடிய இருவரும் ஒருநாள் தொடரிலும் முத்திரை பதித்துவருகிறார்கள். டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் சாதிக்காததைப் பந்துவீச்சில் வெளிப்படுத்தினார்.


இன்றைய போட்டிக்கான இந்திய அணியில் மாற்றமிருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. விக்கெட் காப்பாளர் டோனி சரியாக விளையாடாவிட்டாலும், அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பு வழங்கப்படலாம். ஒருவேளை அவர் நீக்கப்பட்டால் தினேஷ் மொங்கியா இடம்பெறுவார்.

பந்துவீச்சாளர்கள் அனைவரும் சிறப்பாக வீசியதால் மாற்றம் செய்யப்படமாட்டாது. டெண்டுல்கர், ஷேவாக், யுவராஜ் ஆகிய பகுதிநேர பந்துவீச்சாளர்கள் இருப்பதால் கூடுதலாக ஒரு சுழற்பந்து வீச்சாளர் தெரிவுசெய்யப்பட வாய்ப்பில்லை.

தனது துடுப்பாட்டத் திறமையை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் கங்கூலி உள்ளார். இன்றைய ஆட்டம் அவருக்கு சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுனுஸ்கான் காய்ச்சல் காரணமாக கொச்சி போட்டியில் ஆடவில்லை. இன்றைய ஆட்டத்திலும் அவர் ஆடுவது சந்தேகம். பெங்களூர் டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்து பாகிஸ்தான் அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் யுனுஸ்கான். அவர் இல்லாதது பாகிஸ்தானுக்கு பலவீனமாகும்.

இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சில மாற்றங்கள் இருக்கலாம் என்று தெரிகிறது. துடுப்பாட்டவரிசையிலும் மாற்றம் செய்யப்படலாம். அப்ரிடி தொடக்க வீரராக





களமிறங்கலாம்.

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்வியால் பாகிஸ்தான் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற போராடும். இதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உடற் தகுதி பெற்றுவிட்டதாக சொகைப் அக்தர் சொல்கிறார்!

(லாகூர்)



தான் உடற்தகுதி பெற்றுவிட்டதாக பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் கூறியதாவது -

உடற்தகுதி பெற்றுவிட்டதாக நான் உணருகிறேன். உடற்தகுதி நிபுணர்தான் முழுப்போட்டிக்குத் தகுதியாக இருக்கிறேனா என்பதை முடிவு செய்யவேண்டும். முழுமையாக ஓடிவந்து பந்துவீசினேன். அப்போது வலி எதுவும் இல்லை. கால் தசையில் நெருக்கடியும் இருக்கவில்லை.

வேகப்பந்து வீச்சாளர்களுக்கு காயம் ஏற்படுவது வழக்கமான ஒன்றுதான். பெங்களூர் டெஸ்டில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது பாராட்டுக்குரியது. வெற்றிபெற்ற அணியில் நான் இடம்பெறமுடியாமல் போனது எனது துரதிஷ்டம் இவ்வாறு சொகைப் அக்தர் கூறினார்.

# துடுப்பாட்ட நுணுக்கத்தை கங்கூலி மாற்றவேண்டும்!

## பாகிஸ்தானின் முன்னாள் கப்டன் சொல்கிறார்

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலி தனது துடுப்பாட்ட நுணுக்கத் தவறைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ஜாகீர் அப்பாஸ் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலி தற்போது கடும் விமர்சனத்துக்கு ஆளாகிவருகிறார். பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டித் தொடரில் கங்கூலி ஒரு போட்டியில்கூட கௌரவமான ஸ்கோர் அடிக்கவில்லை. சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து விடுகிறார்.

கங்கூலியின் பொறுப்பற்ற ஆட்டத்தை முன்னாள் கப்டன் பிஷன்சிங் பேடி கடுமையாக விமர்சித்திருந்தார். கங்கூலியை அணியிலிருந்து நீக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொச்சி ஒருநாள் போட்டியில் கங்கூலி ஓட்டங்கள் எடுப்பார் என்ற எதிர்பார்ப்பும் ஏமாற்றமானது. அவர் டக் அவுட்டானார். அணியின் வெற்றியால் அவரைப் பற்றிய பேச்சு அமுங்கிப் போனது.



இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டனும், சிறந்த துடுப்பாட்ட வீரருமான ஜாகீர் அப்பாஸ், கங்கூலியின் துடுப்பாட்ட நுணுக்கத்தில் தவறு இருப்பதாகக் குறை கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஜெய்ப்பூரில் அவர் கூறியதாவது -

கங்கூலி தனது ஆட்டத்தில் நம்பிக்கைபெற பெரிய ஸ்கோரை அடிக்கவேண்டியது அவசியமாகும். அதே நேரத்தில் அவர் தனது துடுப்பாட்ட நுணுக்கத் தவறைத் திருத்த வேண்டும்.

பந்துவீச்சை அவர் உன்னிப்பாகக் கணித்து தனது வழக்கமான பாணியில் ஆடவேண்டும். மனோரீதியான நெருக்கடி கங்கூலிக்கு இருக்கிறது.

இந்திய-பாகிஸ்தான் இடையேயான இந்தப் போட்டித் தொடரில் நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பெடரர் சம்பியனானார்!



அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நடைபெற்ற நஸ்டக் -100 ஓபன் ரெனிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து) 2-6, 6-7, 7-6, 6-3, 6-1 என்ற செட் கணக்கில் ராபலை வென்று சம்பியன் பட்டம் வென்றார்.

# 'நந்தி' கௌரவிப்பு விழாவும் சிறுகதை நூல் வெளியீடும்!





(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) இலக்கிய வாழ்வின் மணிவிழாவைக் கௌரவிக்கும் நிகழ்வும், 'நந்தியின் சிறந்த சிறுகதைகள் 12' என்ற நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில், மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளையும், சிறப்புரையை தென்னிந்திய திருச்சபை ஓய்வுபெற்ற பேராயர் ஜெபனேசனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சிவலிங்கராசாவும், பாராட்டுரையை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், நன்றியுரையை நூலின் ஆசிரியர் நந்தி மற்றும் நயினை கிருபானந்தா ஆகியோரும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் சிவச்சந்திரன் வெளியிட்டுவைக்க, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பெற்றுக்கொண்டார்.

மணிவிழா நாயகனுக்கு விழாவில் கலந்துகொண்டவர்கள் மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு



(சங்கானை)

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் - 11 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் சாங்கத்தை சின்னம்மா வித்தியாசாலையைச் சேர்ந்த நித்தியானந்தம் பகீரதன் கோட்ட மட்டத்தில் 100 மீற்றர், 75 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகவும், வலயமட்டத்தில் இவ்விரு போட்டிகளிலும் 2 ஆம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டார். (48)

# துரிதகதியில் மின்சாரம் வழங்கக் கோரிக்கை!

வடமராட்சி கிழக்குப் பகுதியான அம்பன், குடத்தனை உள்ளிட்ட அதனை அண்டிய ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையால் வல்லிபுர ஆழ்வார் கோவில் பகுதியிலிருந்து மின் கம்பங்கள் நிறுத்தப்பட்ட போதும், தொடர்ந்து ஏனைய வேலைகள் முடிவுறாமையால் இந்தப் பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனவே, நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கும் இந்தப் பகுதிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கும் துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# தொடர்ந்து பெய்யும் மழையால் புகையிலை செய்கை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக புகையிலைச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை காரணமாக புகையிலைக் கன்றுகளிலே நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதோடு, அறுவடைசெய்த புகையிலையை பதப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

புகையிலையை அறுவடை செய்து அதனை வெயிலிலே காயவிடுவதற்கு மழை ஆரம்பித்துள்ளமை இடையூறாக உள்ளது.

மேலும், இதுவரை அறுவடை செய்யப்படாமலுள்ள புகையிலைக் கன்றுகளிலும் புள்ளி விழும் நோய் ஏறபடலாம் எனவும் அஞ்சப்படுகிறது. (94)

## திருத்தி வாசிக்கவும்

கடந்த 23 ஆம் திகதியன்று வட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்ட சமுர்த்தி வங்கி சங்கத்தின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தியவர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணேஷ் ஆவார்.

ஆனால் எமது பத்திரிகையில் யாழ்.ப[illegible]பட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் என தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. இந்தத் தவறுக்கு வருந்துகிறோம்.

# பொன்னாலைப் பகுதியில் பாரிய நீர்த்தாங்கி அமைப்பு

பொன்னாலையில் இரு ஆலயங்கள் மற்றும் இரு தாகசாந்தி நிலையங்கள் போன்றவற்றின் குடிநீர் தேவைக்காக நீர்த்தாங்கி ஒன்று அமைக்கும் வேலை கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண செயலாளரின் முயற்சியின் பலனாக நீர்ப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பிரதேசசபையே இந்த நீர்த்தாங்கி அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

பாரிய கிணறு ஒன்று வெட்டப்பட்டு, அந்தக் கிணற்றினூடாக புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கிக்கு குடிநீரைச் சேமித்து, பின்னர் அந்த நீர்த்தாங்கி மூலமாக நீரை விநியோகிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

பொன்னாலை பிள்ளையார் ஆலயம், இரு தாகசாந்தி நிலையங்கள், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆகிய 4 இடங்களுக்கும் குடிநீரை விநியோகிப்பதற்காகவே இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும் பொன்னாலைக் கிராமத்துக்கு இந்த நீர்த்தாங்கி ஊடாக நீர் விநியோகிப்பதன்மூலம், இந்தப் பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (207)

# மீனவர்களின் பிரச்சினை குறித்து தென்மராட்சியில் கலந்துரையாடல்

தென்மராட்சி பிரதேச மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் கடந்த வாரம் தென்மராட்சி கோட்ட அரசியற்துறை செயலகத்தில், கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பெரிய மாவடி, கச்சாய், நாவற்குழி போன்ற பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களும், பங்குத்தந்தை அருட்தந்தை ரவிச்சந்திரன், கூட்டுறவு உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட சங்க சமாச தலைவர் சி.தவரட்ணம், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் அ.அருணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் - தென்மராட்சிப் பிரதேச கடல்நீரேரிப் பகுதியில் மீனவர்கள் தொழில் செய்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ளமை, மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்ப்டுத்துவது போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. (29)

## இடைத்தங்கல் முகாம்களில் தொற்றுநோய் அபாயம்

வடமராட்சி கரையோரப் பிரதேசங்களில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களிடையே தொற்றுநோய் பரவும் அபாயம் இருப்பதால் - அவர்களை விழிப்புடனும், சுத்தமாகவும் இருக்குமாறு சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி - சுப்பர்மடம் பகுதியில் இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தங்கியிருக்கும் மக்களில் ஒரு சிலருக்கு அம்மை நோய் ஏற்பட்டிருப்பது வடமராட்சி அனர்த்த புனர்வாழ்வு செயலணியினரின் சுகாதாரப் பிரிவால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (14)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : க.ஜெயஅனுஸ்ரனா
முகவரி : நெடுந்தீவு - 06

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்துடன் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# விபத்துக்குள்ளான பஸ் பொலிஸ் நிலையத்தில்!

கோண்டாவில் சந்திக்கு சமீபமாக ஓட்டோ ஒன்றுடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேரெதிரே மோதி விபத்துக்குள்ளானதையடுத்து - அவ்விடத்தில் தரித்துவிடப்பட்டிருந்த பஸ், பின்னர் கோப்பாய் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருத்த வேலைக்காக டிப்போவுக்குச் செல்ல முற்பட்ட பஸ் ஒன்றுடன் பலாலி வீதியால் வந்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேரெதிரே மோதியதில் பஸ்ஸின் முன்பக்கம் சேதத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவுடன் சாரதி தப்பியோடிவிட்டதாகவும், விபத்துக்குள்ளான சமயம் அவர் மது போதையில் இருந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (82)

# குடிமனைப் பகுதிகளில் இரவு நேர ரோந்துகள்!

(யாழ்ப்பாணம்)

இரவு வேளைகளில் இராணுவத்தினர் குடியிருப்பு பகுதிகளூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அளவெட்டிப் பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர், இரவு நேரங்களில் துவிச்சக்கரவண்டிகளிலும், கால்நடையாகவும் குடியிருப்புகள் அதிகமாகவுள்ள தெருக்களின் வழியாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் இந்த ரோந்து நடவடிக்கை காரணமாகப் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

யுத்தநிறுத்த காலத்தில் இவ்வாறான ரோந்து நடவடிக்கைகள் அவசியமற்றது எனக் கருதும் பொதுமக்கள், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் கருத்து வெளியிட்டனர். (94)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பிரதேச சபை செயலாளராக பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இ.கணேசானந்தராசா கடந்த முதலாம் திகதி முதல் ஊர்காவற்துறை பிரதேசசபை செயலாளராகப் பதவியுயர்வு பெற்று, அண்மையில் இவர் தமது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (63)

## தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சில்லாலை மாதர் அபிவிருத்தி சங்கத்தால் பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளுக்கான தையல் பயிற்சி நடைபெற்றுவருகிறது.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்றுவருகிறது. இவர்களின் பயிற்சிக்கென கியூடெக் நிறுவனம் தையல் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது.

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் உதவி

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா மற்றும் ஏனைய இடங்களில் தங்கியிருந்து, அண்மையில் மீளக்குடியமர்ந்த சுமார் 24 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவிப் பொருட்கள் வைத்து வழங்கப்பட்டது.

ஏற்கனவே யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கூரை விரிப்புகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## மீள் நியமனம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி, ஓய்வுபெற்ற எஸ்.வீரசிங்கத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் மீள்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்ந்தும் தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலராகக் கடமையாற்றி வருகிறார். (24)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் கடந்தவாரம் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது நடப்பு வருடத்துக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக டி.எம்.வேதாபரணமும், செயலாளராக ப.முருகவேலும், பொருளாளராக இ.செல்வராஜாவும், உப தலைவர்களாக சிவலிங்கம், சண். தயாளன், சிதம்பரப்பிள்ளை, டி.ஆர்.அருமைநாயகம், ஆர்.சிறிதரன் ஆகியோரும் - நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (58)

## பாடசாலைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட 22 பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி கோட்டத்தில் 12 பாடசாலைகளும், பருத்தித்துறை கோட்டத்தில் 10 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவருக்கும் 20 ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (13)





# முதல்தரத்தில் சொனி

உலகின் முதல் தர இலத்திரனியல் தொழில் நுட்பநிறுவனமாகிய சொனி நிறுவனம், உலகின் சிறந்த 500 படங்களை சொனி டிஜிற்றல் தொழில்நுட்ப அம்சத்தின் மூலம் அடுத்த வருடம் தீர்மானித்திருக்கிறது.



2003 ஆம் ஆண்டிலிருந்து மிகவும் பெரிய செலவில் ஆரம்பிக்கப்பட்ட டிஜிற்றல் தொழில் நுட்பம் தற்போது குறைந்த செலவில் பெறக் கூடியதாக இருப்பதாக சொனிக் கம்பனி கூறுகிறது. இதற்காகச் சொனிக் கம்பனி உலகளாவிய ரீதியில் பிரபலமான பல ஸ்ரூடியோக்களுடன் ஒப்பந் தம் கைச்சாத்திட்டிருக்கிறது. முதலாவதாக, முற்றுமுழுதாக சொனி டிஜிற்றல் தொழில்நுட்ப அம்சத்துடன் வர இருக்கின்ற திரைப் படம் ஸ்பைடர் மான் - 30 இதிலே சொனிக் கம்பனியின் தொழில்நுட்பத் திறமை முற்றுமுழுதாகத் தெரியும் எனக் கூறப்படுகிறது. இதேவேளை அமெரிக்காவில் நடந்த டிஜிற்றல் படத் தயாரிப்புப் பற்றிய கூட்டத்தில், இந்தத் தொழிநுட்பம் பற்றி நன்கு விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# வைத்தியத்துக்கு காவல் நாய்



உலகளாவிய ரீதியில் சத்திர சிகிச்சைக்குப்பிறகு நோயாளிகள் பலர் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு வருவது யாவருமறிந்த விடயமாகத்தான் இருக்கிறது. இதைக் களைந்தவிடும் வகையில் ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து தேசிய சுகாதார சபை ஒன்றைத்தோற்றுவித்திருக்கின்றன. இவை ஐரோப்பாவில் நடைபெற்று வருகின்ற கூடுதலான வைத்தியசாலைச் செயற்பாட்டிற்குரிய காவல் நாய்களைப் போல் தொழிற்படுவதாகக் கூறப்படுகிறது. இதேவேளை 2001 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி, சில வைத்தியசாலைகளில் பொருத்தமற்ற வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இருப்பதாகவும், அவர்களையும் மாற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும் இந்தச் சபையின் அறிக்கைகள் கூறுகின்றன. இந்தச் சபையின் செயற்பாட்டுகளால் ஏற்பட்ட விளைவுகளை 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகுதான் கூறமுடியும் எனக் கருதப்படுகிறது. இந்தச் சபை வந்த பிறகு பொருத்தமற்ற சத்திர சிகிச்சைகள் பல நடைபெறவில்லை என்ற செய்தி இனிப்பானது தான்.

# முடி உதிர்தலுக்கு டாட்டா



முடி உதிர்வதற்குரிய பல தரப்பட்ட சிகிச்சை முறைகள் வந்து கொண்டிருந்தாலும், முடி நடும் சிகிச்சை முறையே மிகவும் வெற்றியளிக்கக் கூடிய முறையாகக் கூறப்பட்டு வருகிறது. தற்போது அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டாகச் சேர்ந்து, புதியவகையான முடி நடுகை முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த முறை மிகவும் பொருத்தமான முறையாக இருக்கும் எனவும், அத்துடன் தலையினுடைய தன்மைக்கேற்றவாறு தான் முடி நட வேண்டும் எனவும் கூறிக்கொண்டு வருகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களுடைய கருத்துப்படி, செந்நிறத் தலையை உடையவர்களுக்கு ஒரு விதமான முடி நடுகையும், அத்துடன் கரியநிறத் தலை முடியை உடையவர்களுக்கு வேறுவிதமாகவும் முடி நடுகை செய்ய வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இது முற்றுமுழுதாகப் பரம்பரை அலகு மற்றும் ஓமோன்கள் ஆகியவற்றை ஒன்று சேர்த்து எடுக்கப்பட்ட ஒரு வெற்றிகரமான முடி நடுகை என்று தான் கூறவேண்டும்.

# குருதியமுக்கத்தை குறைக்க அக்குபஞ்சர்



அக்குபஞ்சருடன் கூடிய இலத்திரனியல் தூண்டல் உயர் குருதியமுக்கத்தை குறைப்பதாக அமெரிக்க ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் எலிகளில் செய்யப்பட்ட ஆய்வில், உயர் குருதிய முக்கம் இதன் மூலம் 50 வீதம் குறைக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது இந்த மனிதனிலும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

அக்குபஞ்சர் என்பது புராதன சீன வைத்திய சிகிச்சை முறையாகும். நோய் பாதித்த பகுதிகளில், ஓர் குறிப்பிட்ட அழுத்தத்தில் ஊசி போன்ற கம்பிகளைக் குத்துவதன் மூலம், நரம்புகளைத் தூண்டி சிகிச்சையளிக்கப்படுகிறது.

தமது ஆய்வில் எலியின் முன்னங்காலில் ஊசியை குத்தியதன் மூலம், அதன் குருதிய முக்கத்தைக் குறைத்ததாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இதேபோன்று மனிதனின் முன் கையின் உட்புறமாக, மணிக்கட்டின் மேலாக ஓர் புள்ளியில் ஊசி குத்துவதன் மூலம் அழுத்தத்தைக் குறைக்க முடியுமாம்.

# பூமியை சிதிலமாக்கும் மனிதன்




அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில், மனிதனின் நடவடிக்கைகளால் நமது எதிர்காலச் சந்ததியினருக்காக பூமி தன்னகத்தே கொண்டுள்ள வளங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளமை அறிய வந்துள்ளது. பூமியில் தொடர்ந்து உயிரினங்கள் வாழ்வதை கேள்விக்குறியாக்கும் வகையில், சில இயற்கை மாற்றங்கள் மீள முடியாத அளவுக்கு மாறியுள்ளன.

உலக வள நிறுவனத்தால் கடந்த 4 ஆண்டுகளாக 95 நாடுகளில் 1300 ஆய்வாளர்கள் மேற்கொண்ட கணிப்பீட்டின் இறுதியிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓர் குறைந்த காலப்பகுதியினுள் பூமியின் சூழல் மோசமாகச் சேதமாக்கப்பட்டுள்ளதாக அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உணவு, நீர், விறகு, எரிபொருள் தேவைகளுக்காகவே பூமியை மனிதன் சேதமாக்குவதாக அந்த அறிக்கையின் இறுதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# போஷாக்குள்ள அரிசி




தானியங்களை செயற்கைமுறையில் சத்துள்ளதாக வழங்குகின்ற திட்டத்தில் - தற்போது பொன்னிறமான அரிசி விற்றமின் A அதிகம் கொண்டதாக வந்திருக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரத்துடன் வந்திருக்கின்ற இந்தத் தானியவகை சிறுவர்களின் கண் குறைபாட்டைத் தீர்க்குமெனக் கூறப்படுகிறது.


உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி, வருடா வருடம் 500,000 சிறுவர்கள் கண் குறைபாட்டு நோயால் அவதிப்படுகிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலேயே அதிகம் விளையும் இந்தவகை அரிசியை- ஆசியாவுக்கும் கொண்டுவந்து விளைவிப்பதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பாரம்பரியமான முறையில் பயன்படுத்தப்பட்ட அரிசி வகைகள் இப்போது பயன்படுத்தப்படுவது குறைந்துகொண்டுவருகிறது. அரிசி என்ற பெயரில் ஒருவகையான போஷாக்கு வழங்கப்படுவதாகவே மக்கள் கூறுகிறார்கள். நாங்களும் கடைகளில் அரிசி வாங்குவதை விட்டுவிட்டு, போஷாக்குள்ள அரிசி வாங்குவதே சிறந்தது.

## திரை விமர்சனம்

# கண்ணாடிப் பூக்கள்



பார்த்திபன் படம் என்றாலே வித்தியாசமானது தான் என்பது அனைத்துசினிமா ரசிகர்களுக்கும் தெரிந்த விடயம். பார்த்திபனின் மகன் அஸ்வின், காவேரி என்று மகிழ்ச்சியாகப் போய்க் கொண்டிருக்கிறது குடும்பம். காவேரி அஸ்வினுடைய சித்தி என்றாலும், மிகவும் அன்பாகவே இருக்கிறார். காவேரிக்குப் பிறக்கப்போகும் குழந்தையை ஆவலுடன் எதிர்பார்க்கும் அஸ்வின் – குழந்தை பிறந்த பிறகு தான் ஒதுக்கப்படுவதாக நினைக்கிறான். ஒருகட்டத்தில் குழந்தை அஸ்வினால் இறக்கிறது. குழந்தையைக் கொன்ற குற்றத்துக்காக அஸ்வின் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார். அங்கே டொக்டர் சரத்பாபு அஸ்வினைப் பரிசோதித்து, அவனுக்கு இறந்த குழந்தைபோல இன்னுமொரு தம்பி வந்தால் மட்டுமே குணமடைவா்ன் எனப் பார்த்திபனிடம் கூறுகிறார். இதனை அஸ்வின் ஏற்றானா? இது தான் மீதிக்கதை. இது உண்மையில் "என்ட வீடு அப்பூண்டயும்" என்ற மலையாளப் படக்கதை. இயக்குநர் ஷாஜகானுடைய நேர்த்தியான இயக்கம் படத்துக்கு பிரமாதமாக அமைகிறது. அஸ்வினுக்கு நடிப்புக்கான பரிசு கொடுக்கத்தான் வேண்டும். அற்புதமாக நடித்திருக்கிறார். காவேரி – அஸ்வினை மகனாக நினைக்காமல், ஒரு நண்பனாக நினைத்து அற்புதமாக நடித்திருக்கிறார். நீதிமன்றில் அஸ்வின் இயல்பாக நடித்திருக்கிறார்.



இசையில் எஸ்.ஏ.ராஜ்குமாரின் பாடல்கள் சுமார்தான். ஆர்தர்.ஏ.வில்சனின் ஒளிப்பதிவு அளவாக உள்ளது.


"கண்ணாடிப் பூக்கள்" "கண்ணாடி தாஜ்மகால்"

–சங்கீர்த்தனா –

# போர் முனையில் இயந்திர மருத்துவர்

போர்க்களங்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளக்கூடிய இயந்திர மருத்துவர்களை (Robot) உருவாக்கக்கூடிய ஆராட்சியாளர்களுக்கு 12 மில்லியன் டொலர் பரிசாக வழங்கப்படுமென,அமெரிக்க பாதுகாப்பு அமைச்சான பென்ரகன் அறிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் ஈராக், ஆப்கானிஸ்தான் போர்முனைகளில் சத்திர சிகிச்சையை உடனடியாக மேற்கொள்ளாமையால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டதாக அமெரிக்கப் படைத்தரப்பு கூறுகிறது.




தற்போது சத்திர சிகிச்சையை மேற்கொள்ளக் கூடிய ரோபோவை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்காவின் SRI இன்ர நெஷனல் என்ற அமைப்பு ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பு பென்ரகனுக்காக வெளியிட்ட விடியோ ஒளிப்பதிவு ஒன்றில், போரின் மத்தியில் காயமடைந்த போர்வீரர் ஒருவருக்கு எவ்வாறு ரோபோ துரிதகதியில் சத்திர சிகிச்சை மேற்கொள்கிறது என்பது படம் பிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த சத்திர சிகிச்சை ரோபோவில் மேலும் இரண்டு திறன்கள் சேர்க்கப்பட வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். ஒன்று போரின் மத்தியில் இந்த இயந்திர மருத்துவருக்குத் தேவையான உபகரணங்களை உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கக் கூடிய ஓர் தாதி தேவை.

மற்றையது ரோபோவுக்கும் அதன் தொலைவில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் இடையிலான தந்தியில்லா தொலைத் தொடர்பு கடும் போரின் மத்தியிலும் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். இந்த இரு பிரிவிலும் முன்னேற்றம் கண்டால், போரின் மத்தியில் சத்திரசிகிச்சை செய்ய சிறந்த மருத்துவர் ரெடி!


# அதிகரிக்கும் $CO_2$



உலக வெப்பநிலை உயர்வுக்குக் காரணமான காபனீர் ஒட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் அளவுக்கதிகமாகியுள்ளது. 378 PPM ஆக (Parts Per Million) இதன் அளவு காணப்படுகிறது. ஹவாயில் உள்ள ஆய்வு கூடம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாகவே இந்த அதிகரிப்புக் காணப்படுகிறது.

1958 ஆம் ஆண்டு முதல் – சீராக அதிகரித்து வந்த காபனீரொட்சைட்டின் அளவு தற்போது திடீர் அதிகரிப்பைக் காட்டுகிறது.

# கணினி மோசடியைத் தடுக்க கைவிரல் அடையாளம்





கணினி வலையமைப்புகளில் சட்டவிரோத வைரஸ் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக 80 பாரியகணினிவலையமைப்பு நிறுவனங்கள் தன்னியக்க ரீதியில் இவற்றைக் கண்டறியக் கூடியதும், தடுக்கக் கூடியதுமான Software ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன.

கைவிரல் அடையாளங்களை (அதை இயக்குபவனின்) இவை பதிவில் வைத்துக் கொண்டு மோசடியாளர்களை உடனடியாக கண்டறிந்து, தனது செயற்பாட்டை நிறுத்திவிடும். அத்துடன் இது தனது வலையமைப்பில் உள்ள ஏனைய கணினிகளையும் உஷார்படுத்தி விடுவதால், மோசடியாளர்களைத் துப்புத்துலக்குவது சுலபமாகிவிடும் எனக் கூறப்படுகிறது.

# செல்லிடக் கருவிகளில் ரீ.வி. நிகழ்ச்சிகள்

விண்டோஸ் தயாரிப்பு செல்லிடக் கருவிகளில் (Mobile devices) தினசரி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் என்பவற்றை டவுண்லோட் செய்யக் கூடிய வசதியை மைக்ரோ சொவ்ட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.




இந்தப் பகேஜ் நிகழ்ச்சிகள் மைக்ரோ சொவ்ட் நிறுவனத் தயாரிப்புகளான ஸ்மாா்ட்போன் மற்றும் பொக்கட் கம்பியூட்டர்களுக்கு மட்டுமே பொருந்தும். இதற்கென கட்டணமாக 19 அமெரிக்க டொலர் அறவிடப்பட்டாலும், அநேகமான நிகழ்ச்சிகள் இலவசம். அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சி நிறுவனங்களாக Mtv, Fox sports, Diy Network போன்றவை இதற்கென நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.

# பெண்களுக்கு செக்ஸ் நோய்கள்



ஆறுதலாகத் திருமணம் செய்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. ஆய்வாளர்களின் கருத்துப்படி செக்ஸ் சம்பந்தமான நோய்கள் இதன் போது ஏற்படுவதாகவும், அந்த நோய்களைக் குணமாக்குவது மிகவும் கடினம் எனவும் ஆய்வாளர்கள் கூறிவருகிறார்கள். மன்காஸ்டர் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, 17வயதில் திருமணம் செய்யும் பெண்களிலும் பார்க்க, மிகவும் தாமதமாகத் திருமணம் செய்யும் பெண்களுக்குப் பலதரப்பட்ட சிக்கல்கள் தோன்ற வாய்ப்பிருக்கின்றன. பக்றீரியா சம்பந்தமான நோய்களும் ஏற்படுகின்றன.

புற்றுநோய் கூட மிகவும் சிக்கலான வயதுகளிலேயே ஏற்படுகிறது. வைத்தியர் களுடைய ஆலோசனைப்படி செக்ஸ் என்பது ஒரு வகையான உடற்பயிற்சி போன்றது.அது திடீரெனச் செயற்படும் பொழுது, உடலிலுள்ள ஓமோன்கள் சடுதியாகச் சுரக்கப்படுகிறது. இதன் காரணமாகப் புதிய செக்ஸ் நோய்கள் ஏற்படுகின்றன. இதில் என்ன புதுமை என்றால் பெண்களே மிகவும் பாதிப்படைகிறார்கள்.

# வவுனியா மாவட்டத்தில் மாபெரும் கண்டனப்பேரணி!

(வவுனியா)

அரசு சமாதான முன்னெடுப்பைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

வைரவப்புளியங்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியங்களின் தலைவர் சதாசிவம் குலதேவராசா இதனைத் தெரிவித்தார்.

மேலும் இதற்கான முழு ஏற்பாடுகளையும் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மேற்கொள்வதெனவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் எழுச்சிப்பேரணி சமாதான முன்னெடுப்பு விரைவுபடுத்தப்படவேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகள் மீதான தாக்குதல்கள், நிழல்யுத்தம் என்பன நிறுத்தப்படவேண்டும், இடைக்கால சபையை அரசு ஏற்படுத்தவேண்டும். விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணி தமிழ் மத்திய மகா வித்தியாலய வாசலில் இருந்து ஆரம்பித்து, வவுனியா நகரின் ஊடாகச் சென்று, நகரசபை மைதானத்தைச் சென்றடையும். அங்கு கண்டனக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அரசாங்கத்துக்கும், நோர்வே இராஜதந்திரிகளுக்குமான மகஜர்கள் முறையே அரச அதிபரிடமும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதியிடமும் கையளிக்கப்படவுள்ளன.

வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம், சதாசிவம் கனகரட்ணம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.என்.ஜி.நாதன் உட்பட ஆசிரியர் சங்கத்தினர், மாணவர் அமைப்புப் பேரவையினர், முச்சக்கரவண்டி சங்கத்தினர், வர்த்தக சங்கத்தினர், தனியார் பேரூந்து சங்கத்தினர், கிராம அபிவிருத்தி மன்றங்களின் மன்றப் பிரதிநிதிகள், அன்னையர் முன்னணி பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் நகரத்தின் இயல்பு நிலையைக் குழப்பாத வகையில் இடம்பெறவுள்ள இந்தப் பேரணிக்குப் பொறுப்பாக வன்னிமாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவார்கள் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.




# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

ஏ - 9 வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார். கனகராயன் குளத்துக்கும், புளி யங்குளத்துக்கும் இடையில் புதூர்ப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த கனரக வாகனத்தை மோட்டார் சைக்கிளில் சென்றவர் முந்திச் செல்ல முயற்சித்த போது இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்தவரும், தற்போது கொழும்பில் வசிப்பவருமான காந்திகுமார் (வயது 29) என்பவரே மரணமானவர் ஆவார்.

இந்த விபத்து தொடர்பாக மாங்குளம் காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





போராளி எழுத்தாளர் தமிழவளின் 'எல்லை காக்கும் இல்லங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் முதற்பிரதியை கேணல் துர்க்கா வெளியிட்டு வைக்க, தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் பாலச்சந்திரன் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும், எல்லைப்படை மாவீரர் ஒருவரின் துணைவியாருக்கு மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் யாழினி நூலின் பிரதியை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். சு.பாஸ்கரன்

# சின்னஞ்சிறு செய்திகள்

## தொலைத்தொடர்பு சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் தடைப்பட்டுப் போயிருக்கும் தொலைத் தொடர்பை மீள ஏற்படுத்தும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேற்கொண்ட பெரு முயற்சியால் தமிழீழ நிர்வாக சேவையின் ஒழுங்குபடுத்தலில் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் தொலைபேசிகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் அடிப்படையில் ஆரம்பகட்டமாக தொலைத்தொடர்பு கம்பிகளுக்கான கம்பங்கள் நாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களின் ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், இடம்பெயர் சேவை ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த இடம்பெயர் சேவையில்- கடவுச்சீட்டுக்கள் வழங்குதல், பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல், தேசிய அடையாள அட்டை வழங்குதல், வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆகிய சேவைகள் இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சண்முகலிங்கம் தெரிவித்தார்.

## 'நிழல்' இதழ் வெளிவந்துள்ளது

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் சமூக பொருளாதார அபிவிருத்தி இதழான 'நிழல்' வெளிவந்துள்ளது.

இந்த நூல் 4 ஆவது இதழாக வெளிவந்துள்ளது. இதில் மீண்டும் 'புதிதாய் முளைப்போம்' என்னும் கிராம தரிசனம், சுனாமி அழிவிலிருந்து மீள துரித நிகழ்ச்சித் திட்டங்கள், துயரில் மீளத்துணையிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 'வருமுன் காப்போம்' போன்ற அம்சங்களுடன் மாவட்ட ரீதியான செய்திகளையும் தாங்கி வெளிவந்துள்ளது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஏப்ரல் - 05

1918 : அமெரிக்காவில் 500,00,000,00 டொலர் முதலீட்டில் போர்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

1919 : அயர்லாந்தில் சுதந்திரத்துக்காகப் போராடிய "சின்ஃபெயின் டெயில்" என்ற போராட்டக் குழுவினது தலைவராக "ஏமன் டி வேலரா" தெரிவுசெய்யப்பட்டார்.

1921 : சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு, போரின்போது கடைப்பிடிக்கப்படவேண்டிய புதிய வரைமுறைகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டது.

1940 : உலகின் சோக வரலாறுகளுள் ஒன்றான "காட்யின் படுகொலை"யின் முதற்கட்டம் அரங்கேற்றப்பட்டது. ரஷ்யா 5 ஆயிரத்துக்கும் அதிகமான போலந்து அதிகாரிகளை "காட்யின்" என்ற இடத்தில் கொன்று குவித்தது.

1942 : ஜப்பானிய விமானங்கள் கொழும்பு நகரில் குண்டுவீசித் தாக்கின.

1945 : ரஷ்யா - ஜப்பான் நடுநிலைமை ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக ரஷ்யாவின் வெளிநாட்டமைச்சர் மொலட்டோவ் அறிவித்தார்.

✪ ஹிட்லரை உருவாக்க பெரிதும் காரணமாக இருந்த அட்மிரல் கானரிஸ் "துரோகி" என்று குற்றஞ்சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

1958 : கியூபாவில் பாடிஸ்ட்டா அரசை எதிர்த்து பிடல் காஸ்ட்ரோ போராட்டத்தைத் தொடங்கினார்.

1964 : சாரதி இல்லாமல் இயங்கும் தானியங்கி சுரங்கப் ரயில் முதன் முதலாக லண்டனில் வுட்ஃபோர்ட் ரயில் நிலையத்துக்கும், ஹெயினால்ட் ரயில் நிலையத்துக்கும் இடையே வெள்ளோட்டம் விடப்பட்டது.

1969 : அலஸ்காவிலுள்ள பொய்ண்ட் பார்ரோ என்ற இடத்தில் இருந்து புறப்பட்ட வொலி ஹெறபர்ட் என்பவர் தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழுவினர், நாய்கள் பூட்டிய ஸ்லெட்ஜ் வண்டி மூலம் தரைவழியாக 14 மாதங்கள் பயணம் செய்து, 2000 கி.மீற்றர் கடந்து வடதுருவத்தை அடைந்து, யூனியன் ஜாக் கொடியை நட்டனர்.

1973 : வியாழன் கிரகத்தை 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதியும், சனிக்கோளுக்கு 1979 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதியும் சென்றடையும் வகையில் திட்டமிட்டு, மனித குலத்தின் விண்வெளித் தூதராக பயோனீர் -11 விண்கலம் விண்ணோக்கி ஏவப்பட்டது.

1980 : பிரிட்டிஷ் கயானாவில் 1856 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மிக அபூர்வமான ஒரு செண்ட் பெறுமதியான முத்திரை நியூயோர்க்கில் 850,000 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

1992 : பொஸ்னியா சுதந்திரம் பெற்றது.

✪ சீனாவில் சங்கீதத் திருநாள்.

✪ இந்தியாவில் தேசிய கடற்பகுதித் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

தொகுப்பு - சந்துரு

# அடிப்படை வசதியற்ற நிலையில் கிடாச்சூரி நலன்புரி நிலைய மக்கள்

(வவுனியா)

வவுனியா கிடாச்சூரி நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது, வவுனியா - கல்மடு, மன்னார் - இரணை இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் 78 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, இவர்களுக்கு தற்போது அரசாங்கத்தினால் நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

இந்த மக்கள் தமது சொந்த இடமான கல்மடு படிவம் 1, படிவம் 2 பகுதிகளை இராணுவம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதால், இராணுவம் இந்த மக்களை அவர்களது பிரதேசத்துக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. அதேவேளை போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் கல்மடு பிரதேசத்தில் விவசாயம் செய்ய இராணுவம் அனுமதி வழங்கியபோதும், தற்போது அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டி நூல்

(கிளிநொச்சி)

திருநெறிக் கழகத்தினரின் ஆதரவுடன் செ.சிவஞானம் ஆசிரியரின் 'இந்து சமய தகவல் களஞ்சியம்' எனும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரிய வழிகாட்டி நூல் - நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு திருநெறிக்கழகத் தலைவர் தமிழ் ஐயா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருநெறிக்கழகம் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே நடத்திய போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், சிறப்புப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (செ)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
*ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்

அந்தச் செய்தி எந்தக் கணத்திலும் அறிவிக்கப்படலாம் என்ற அச்சம் கடந்த சில வாரங்களாக எல்லோர் மத்தியிலும் இருக்கவே செய்தது. ஆனாலும், அந்தச் செய்திக்குரிய நிகழ்வு நடந்து விடக்கூடாதென்றுதான் உலகம் விரும்பியது.

அதற்காக முழு உலகமுமே பிரார்த்தித்தது. நெஞ்சுருக வேண்டுதல் செய்தது. ஆனாலும் இயற்கையால் தான் எழுதிய விதியை மாற்றியெழுதமுடியாது போய்விட்டது. எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம் என்ற ஒரு ஞானியின் வாக்குக்கு அர்த்தம் சேர்க்குமாப் போல் கடைசியில் எல்லோரையும் துயரத்திலும், மன அழுத்தத்திற்குள்ளும் உறையவைக்கும் அந்தச் செய்தி வெளிவரவே செய்தது.

சனிக்கிழமை இரவு 'ஜி.எம்.ரி' நேரப்படி சரியாக 10.37 இற்கு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் காலமானார் என்ற செய்தி உலகிற்கு அறிவிக்கப்பட்டபோது உலகம் சோகமயமானது.

சுமார் 110 கோடிக்கும் அதிகமான கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவராக விளங்கிய பரிசுத்த பாப்பரசா மதாபிமானத்திற்கு அப்பாலும் மனிதாபிமானம் கொண்ட அனைத்து உலகமக்களாலும் வணங்கப்பட்டும், மதிக்கப்பட்டும் வந்தமைக்கு மிகமுக்கியமான காரணம் அவர் தன்னை இறை சேவையாளராக மட்டுமன்றி மக்கள் சேவையாளராகவும் இனம்காட்டிச் செயற்பட்டமையேயாகும்.

வத்திக்கானின் அரசியல் என்பது அதற்கேயுரிய பாரம்பரிய மதக்கோட்பாடுகளை இறுக்கமாகவும், விடாப்பிடியாகவும் நடைமுறைப்படுத்துவதில் முனைப்புடையதாகச் செயற்பட்டபோதும், அதனுடன் கருத்து முரண்நிலைப்பாடு கொண்டு எதிர்த்தோர்கள்கூட - பாப்பரசரின் உலகளாவிய ரீதியிலான மனிதகுல அமைதிக்கான, சமாதானத்திற்கான பணிகளுக்காக அவரை மதிக்கவும், துதிக்கவும் செய்தனர்.

கத்தோலிக்க மத பாரம்பரியத்தின் இறுக்கமான சம்பிரதாய வரையறைகளை உடைத்தெறிந்து சமகாலத்தின் நவீனத்துவ சமூகவளர்ச்சிப்போக்கிற்கு இசைவாக மாற்றங்களை செய்ய முன்வரவில்லை என்ற விமர்சனம் அவர் மீது வைக்கப்பட்டாலும் கூட, அவரின் ஏனைய மனிதகுலப் பணிகள் குறித்து உலகம் அவரை கௌரவித்து வணங்கவே செய்தது.

மிக நீண்டகாலம் அதாவது 26 வருடங்களுக்கும் மேல், பாப்பரசராக பணியாற்றிய இவர் 16.10.1978 இல் பாப்பரசரானபின்னர் நூற்றுக்கும் அதிகமான வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு மதப்பணியையும், மனிதப் பணியையும் ஆற்றிய புனிதராவார்.

பொதுவுடமை கொள்கைகளுக்கு - கம்யூனிஸ்ட்டுக்களுக்கு நேரடிவிரோதியான இவர் கம்யூனிஸ்ட் நாடாக இருந்த போலந்தை தாயகமாகக் கொண்டவர் என்பதும், இத்தாலிக்கு வெளியே - அதுவும் ஒரு கம்யூனிஸ்ட் நாட்டிலிருந்து தெரிவான முதலாவது பாப்பரசருமாவார்.

இவர் பயணம் செய்யாத பிரதான நாடுகள் மிகக் குறைவாகும். இவர் சந்திக்காத உலகின் முக்கிய தலைவர்களே இல்லை எனலாம். தனது பணிக்காலத்தில் சமாதானத்திற்காகவும், மனிதகுல மேம்பாட்டுக்காகவும் சுமார் 1247613 கி.மீற்றர் தூரம் பயணங்களை மேற்கொண்டு மக்களைச் சந்தித்திருக்கிறார். உரைகளை நிகழ்த்தியுள்ளார். பிரார்த்தனைகளை நடத்தியுள்ளார்.

பன்மொழிப் புலமைகொண்ட பாப்பரசர் தான் எந்த நாட்டுக்குச் சென்று இறங்கினாலும் முதலில் அந்த மண்ணை முத்தமிட்டு வணங்கியபின்னரே அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பண்புகொண்டவர்.

தான் பதவியேற்றதும் அவர் கூறிய வார்த்தைகள் "எனக்கு இப்போது பொறுப்பை ஏற்கத் தயக்கமாக உள்ளது. எனினும் ஆண்டவரின் விருப்பத்துக்கு அடிபணிந்து எமது தாயாகிய மரியாளில் நம்பிக்கை வைத்து இப்பாரிய பொறுப்பை ஏற்கிறேன். இப்பணிக்காக என்னை முழுமையாக அர்ப்பணிக்கிறேன்... முழுவதும் உங்களுக்காகவே" என்பதேயாகும்.

இது அவரது அடக்கத்தையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்தும் வார்த்தைகளாகும்.

தன்னைத் தாக்கிக் கொல்ல முயற்சித்த துருக்கியத் தீவிரவாதி ஒருவனை சிகிச்சையின் பின்னர் சந்தித்து மன்னிப்பு வழங்கிய அவரது மனிதநேயம் உலகின் புருவத்தை வியப்பால் உயர்த்த வைத்தது.

இறுதியாக அவர் மருத்துவமனையில் கடும் நோயுற்று இருந்த வேளையிலும் தன்னருகே இருந்தவர்களிடம் தான் பணிப்பொறுப்பை ஏற்றபோது என்ன வார்த்தைகளைக் கூறினாரோ அதே வார்த்தைகளையே கூறியுள்ளார்.

"என்னை உங்கள் பணிக்காக முழுமையாக அர்ப்பணிக்கிறேன்".

இந்த வார்த்தைகள் அவரின் வாழ்க்கையின் அர்த்தத்தை முழுமையாக உணர்த்துவதாகவே உள்ளன.

மரணம் பெரும்பாலானோரின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பது உண்மைதான்.

ஆனால் சிலரே மரணத்தின் பின்னரும் மகத்தான வாழ்வொன்றிற்கு என்றென்றும் உரியவர்களாகின்றனர்.

அவர்கள் மக்களுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த மனிதப் புனிதர்களாகவும் மதிக்கப்படுகின்றனர்.

சமாதானத்திற்காக ஓயாது உழைத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரின் அமைதிப் பணியை அடுத்து அந்தப் பதவிக்கு வருவோர் மூலம் தொடரும் என்ற நம்பிக்கையுடன் உலகம் அவருக்கு அஞ்சலிக்கிறது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# உலகின் மனிதாபிமானம் உள்நாட்டில் எங்கே?

கடற்கோள் ஏற்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்கள் பற்றிப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக படங்களுடன் கட்டுரைகள் வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. உறவினர்களை இழந்தவர்கள் தங்கள் துயரங்களைச் சொல்லிச் சொல்லிக் கொஞ்சம் கொஞ்சமாக ஆறுதலடைந்து கொ... டிருக்கின்றனர். ஆனால் பட்ட துன்பம் போதாதென்று தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் கடும் பழை பெய்துகொண்டிருக்கிறது. வெள்ளம் பெருக்கெடுக்குமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தலைதூக்கியிருக்கிறது. கூடாரங்களிலும் கொட்டில்களிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள மக்கள் மழையிலும் வெள்ளத்திலும் படும் அவஸ்தை சொல்லமுடியாது என்று சொல்லிக்கொண்டே வந்தார் பரமசிவம்.

பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்றும் ஒரு பழமொழி இருக்கிறது. இது நமது மக்களுக்குத்தான் பொருந்துமோ என்றேன்.

அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. கடற்கோள் இருபது நிமிடத்தில் ஏதோவெல்லாம் செய்துவிட்டுப் போய்விட்டது.

ஆனாலும் மனிதம் கடற்கோளில் அடிபட்டுப் போய்விடவில்லை என்பதை நிரூபிப்பதுபோல உலக நாடுகளும் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் மூலை முடுக்கிலுள்ள மனிதர்களும் உடனடியாக உதவிக்கரம் நீட்டினார்கள். கோடி கோடியாக நிதி வந்து சேர்ந்தது என்று பரமசிவம் சொல்லிக்கொண்டே போனார்.

ஆனால் ஐந்துசதம்தானும் வந்துசேரவில்லையென்று நான் நினைவூட்டினேன்.

பணம் மட்டுமல்ல பொருள்களாகவும் மேலும் மேலும் வந்து குவிந்தன. துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் இன்னும் திறக்கப்படாத பெட்டிகளும் கிடக்கின்றனவாம் என்றார் பரமசிவம்.

இதில் கரடிப் பொம்மைகள்தான் அதிகம். இவை எதற்கு? என்று 'பயங்கரவாத புகழ்' அமைச்சர் கதிர்காமர் சொல்லியிருந்தாரே என்றேன் நான்.

கரடிப் பொம்மைகள் எதற்கு என்று ஒரு தடவை கதிர்காமர் சொன்னதற்கு கதிர்காமருக்குக் குழந்தைகளின் மனோநிலையை புரிந்துகொள்ளும் நெஞ்சமும், இளகிய மனமும் இல்லையென்று மக்களும் இளைஞர்களும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டனர். சிங்களப் பத்திரிகைகளிலும் இவை வெளிவந்திருக்கலாம். கதிர்காமர் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

தான் சொன்னதை பத்திரிகைகள் திரித்து வெளியிட்டன, விளங்காமல் வெளியிட்டுவிட்டார்கள் என்று அம்மையார்போல கதிர்காமர் விளக்கம் சொல்லவில்லைப்போலிருக்கிறதே என்றேன்.

அப்படிச் சொல்லித் தப்பிக்க முனைந்திருந்தால் மேலும் மேலுமல்லவா வாங்கிக்கட்டியிருப்பார். நான் சொல்லவந்தது என்னவென்றால் மனிதாபிமானத்துடன் உலகின் மூலைமுடுக்குகளில் உள்ள குழந்தைகள்கூட தெருக்களில் உண்டியல் குலுக்கியும் நிதி சேகரித்து அனுப்பியிருந்தர்கள். இங்குவந்து குவிந்த நிதியையும் பொருள்களையும்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாகுபாடில்லாமல் பகிர்ந்தளிப்பதற்கு இலங்கையில் ஆட்சிப்பீடத்திலுள்ளவர்களுக்கு மனிதாபிமானம் இல்லையே என்பது தான் கவலை. எதுக்கெல்லாமோ அரசைத்தட்டிக் கேட்கும் எதிர்க்கட்சியினரும் இது பற்றிக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை என்றார் பரமசிவம்.

அவர்களுக்கு வேறு எத்தனையோ கவலைகள். அம்மையார் தொடர்ந்தும் அதிகாரத்திலிருப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை எப்படி முறியடிப்பது, ரணிலை அதிகாரத்துக்குக் கொண்டுவரமுடியுமா, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த அம்மையார் தரப்பில் எடுக்கப்படும் எத்தனங்களை எப்படிச் சமாளிப்பது, இவற்றோடு எஸ்.பி.திஸநாயக்கவை சிறைமீட்பது எப்படி என்பதெல்லாம் எதிர்க்கட்சிக்கு இன்றுள்ள முக்கிய கவலைகள் என்றேன்.

ஓமோம், நீர் சொல்வது முற்றும் உண்மை. போரினாலும் கடற்கோளினாலும் பாதிக்கப்பட்டு அல்லற்படும் தமிழர் தாயக மக்களுக்கு இப்போது அரசசார்பற்ற நிறுவனங்கள்தான் பெருமளவில் ஆறுதலளித்துவருகின்றன. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவும் அரசும் - புலிகளும் இணைந்த பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைக்கும் முயற்சி என்னவாகும். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்ட காலம் முதல் சந்திரிகா 95இல் தெரிவித்த யோசனை உட்படத் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள், யோசனைகள் போல இதுவும் உருப்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது என்றார் பரமசிவம்.

மனிதாபிமானத்தைத் தொலைத்துவிட்ட நாட்டில் எந்த யோசனை, எந்தத் திட்டம் உருப்பெறமுடியும். இப்போது அரசசாரா நிறுவனங்கள்தான் தமிழர் தாயகத்தில் பெருமளவு ஆறுதல் தரக்கூடியதாக செயற்பட்டுவருகின்றன. இவற்றுக்குக்கூட கட்டுப்பாடு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறதே என்றேன்.

உண்மைதான். அரசசாரா அமைப்புக்களின் பெருமளவான நிதி விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திலுள்ள வன்னிக்குத்தான் போகிறதென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச சில நாட்களுக்கோ வாரங்களுக்கோ முன் பொது நிகழ்ச்சியொன்றில் பேசும்போது கூறியதாக நினைவு. அரசசாரா நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இவர் கூறியிருந்தார். இந்த நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் கூட்டங்களில் பேசி வந்தார். இப்பொழுது விமல் வீரவன்ச உட்பட ஜே.வி.பி உறுப்பினர்களான அஞ்சான் உம்மா, இராமலிங்கம், சந்திரசேகரன் முஸம்மில் முகம்மது எனப் பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர் லொக்குபண்டாரவிடம் ஒரு கோரிக்கைமனுக் கொடுத்திருக்கிறார்கள் அரசசாரா நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றியும் நாட்டில் அதன்தாக்கம் பற்றியும் ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும்படி இவர்கள் சபாநாயகரை கேட்டுக்கொண்டுள்ளனர் என்றார் பரமசிவம்.

அதாவது வெளிநாட்டு நிதியோ வேறு எந்த உதவியுமோ தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடாது விடுதலைப் புலிகளுக்கு இதில் எந்தத் தொடர்பும் இருக்கக் கூடாது என்பது ஜே.வி.பி யின் ஒரே நோக்காக இருக்கிறது. இப்படித்தான் மூன்பு இந்தியாவையும் இந்தியப் பொருட்களையும் எதிர்த்து நின்றார்கள் இப்பொழுது இந்தியாவுடன் உறவு கொண்டாடுகிறார்கள் ஜே.வி.பி தலைவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தொன்பதாவது ஆண்டு மகாநாட்டில் கலந்து தோழமை பாராட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஜே.வி.பி ஒரு கம்யூனிஸ்ட் அமைப்பே அல்ல என்று முன்னொரு தடவை இந்தியக் கம்யூனிஸ்ட் ஒருவர் சொன்னதாகவும் ஞாபகம் இதே ஜே.வி.பி நோர்வேக்கு எதிராகக் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியது. சந்திரிகா அம்மையாருடன் கூட இருந்து கொண்டே அவரைக் கண்டிக்கிறார்கள். அனுராதபுரத்தில் நடந்த கூட்டணி அரசாங்கத்தின் ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியினருடன் கைகோர்தத்து வீர நடை போட்டனர். பிள்ளையார் கோவிலில் போய்த் தேங்காய் உடைத்தனர். இவர்கள் காலத்துக்குக் காலம் தங்களை மாற்றிக் கொள்பவர்கள் என்றேன்.

பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் அடித்தார் விமல் வீரவன்ச ஆனால் தேங்காய் உடைதது்ச் சிதறவில்லை இது நல்லதா கெட்டதா என்று தெரியவில்லை என்றார் பரமசிவம்.

உடைத்துச் சிதறாதது தேங்காய்க்கு நல்லது என்றேன்.

அதுவும் சரிதான் ஆனால் தமிழ் மக்களுக்கு இந்த கடற்கோள் பாதிக்கப்பட்ட நிலையிலும் உதவி கிரைடக்கக் கூடாதென்பதில் குறியாக இருக்கும் ஜே.வி.பி தாங்கள் தமிழ் மக்களுக்கு விரோதிகளல்ல என்றும் இனவாதிகளல்ல என்றும் கூறுகிறார்கள். கடற்கோளால் பாதிக்கப்பட்டு அல்லற்படும் மக்களுக்கு மனிதாபிமானத்தடன் உலக நாடுகளும் உலகிலுள்ள பொது மக்களும் அளித்த உதவிகளைப் பங்கிட்டு வழங்குவதற்கு அரசு இன்னும் முன்வந்து நடவடிக்கை எடுக்கவில்லை. அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் முன்னாள் புரட்சி வீரர்கள், அரசு சாரா நிறுவனங்கள் அல்லற்படும் மக்களுக்கு உதவுவதைக் கூட எப்படித் தடுக்கலாமென்று செயற்படுகிறார்கள். இவர்களுடைய மனிதாபிமானம் எப்படி இருக்கிறது ? என்று கேட்டபடியே புறப்பட்டார் பரமசிவம்.

பகுதி - 75

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இவ்வளவுக்கும் அவர் எங்கட ஸ்கூலுக்கு வந்து எங்கட புள்ளைக்கு படிப்பிச்சதிலதான் அவருக்கும் எங்களுக்கும் பழக்கம். அந்த மனுசன் செய்த உதவி எங்கட அயலில இருந்தவ கூடச் செய்யேல்ல. என்ன இருந்தாலும் அந்த நேரம் செய்த உதவி தானே பெரிசு.

அதோட ராஜீ எண்ட முஸ்லிம் ஆள் மாவனல்லயில தன்ரை தங்கச்சி வீட்டையிருந்து ரஸ்க்கும் பிஸ்கற்றும் கொண்டந்து தந்து இரவு ஒண்டரையில் இருந்து இரண்டரை வரைக்கும் எங்களோட இருந்தவர்.

அலை காலமை அடிச்சதில இருந்து ஒண்டுமே இல்லாதிருந்த எங்களுக்கு அதுதான் முதல் கிடைச்ச சாப்பாடு. போர்க்கக் கூட சீல இல்லாம நடுங்கிக் கொண்டிருந்த அந்த நேரம் அவை தான் உடுப்பு தந்தவ என்றார்.

தொடர்ந்து சபாரத்தினத்துடனான உரையாடல் மீண்டும் ஆரம்பித்தது. நான் என்ரை புள்ளய தேடிக் கொண்டு வரேக்கை பெரியவன்ரை வயிரவர் கோயிலடியில பொச்சுமட்டைக்குள்ள ஏதோ ஆடுது. நான் இதென்ன ஆடுது எண்டு கம்பெடுத்து விலத்திப் பார்க்க அதுக்குள்ள ஒரு புள்ள இருக்குது. அப்படியே நடுங்கிக் கொண்டு இருக்குது அந்தப் புள்ள.

'அந்தப் புள்ளக்கு எத்தின வயசிருக்கும்'

'ஆறு வயசு'

'பேர் என்ன'

சிவரஞ்சினி நான் அதுக்குப் பிறகு கையால எடுத்துத் தூக்கத் தான் அது அம்மா எண்டு கத்திச்சுது. எனக்கு அழுகையும் வந்திட்டுது. என்ரை புள்ளையையும் காணேலத்தானே எண்டு அழுதழுது போனேன். ஒரு சனமும் இல்லையே? எல்லாச் சனமும் ஓடிட்டுதே. இதுக்குள்ள புள்ள கக்கா போட்டுது நான் தண்ணில புள்ளயக் கழுவிப் போட்டு துடைக்கவும் வழியல்லாம ஈரத்தைப் போக்காட்டிப் போட்டு கொண்டு போய் தாய் தகப் பனிட்டை ஒப்படைச்சன்.

என்ரை புள்ள ஆமிக்காறன்ர வெடிபட்டும் தப்பினது. 2001 ஆம் ஆண்டு அது நடந்தது.

இந்தப் புள்ள வீட்டுக்கை இருக்கேக்கை ஆமிக்காரங்கள் றெயினிங் எடுக்கேக்கை வெடிபட்டது. றவுண்ட்ஸ் கூட எங்கட வீட்டுக்கை இருந்தது. புள்ளய ஒப்பிறேசன் செய்து தான் தப்ப வைச்சது. புள்ளயத் தர முதல் றவுண்ட்ஸ் தான் எங்களிட்டைத் தந்தவங்கள் அப்படி யெல்லாம் தப்பின புள்ள இது.

இதின்ரை குணத்துக்கு இன்னும் ஒரு புள்ளை வராது. இனி பெத்து வளக்கவும் முடியாது. இருக்கிற மற்ற ரெண்டு புள்ளயளும் இதின்ர குணத்துக்கு வராது. அவ்வளவு பதுமை.

என்ர பிள்ளைக்கு போடுறதுக்கு வண்ணத்துக்கு வண்ணம் உடுப்பு இருந்தும், கடைசியில மாத்துறதுக்கு உடுப்பு இல்லாமல் பாயில சுத்தித் தான் அடக்கம் செய்தது. அது தான் அந்தப் புள்ளயின்ர பலன்.

இவ்வளவு வசதி இருந்தும் என்ர சொந்தக் காசில் ஒரு அஞ்சு ரூபாக்கு சாம்பிறானிக் குச்சி வேண்ட வழியில்லாம இருந்தன். கடைசியில என்ரை காசில ஒரு சதம் கூட என்ர புள்ளக்கு செலவழிக்க வசதியில்லாத நிலையில என்ரை புள்ள போட்டுது. அது தான் எனக்கு நினைக்கக் கவலை.

'கண் கலங்கியபடி அவர் கூறியதைக் கேட்டதும் தலையில் கை வைத்து விம்மத் தொடங்கினார்'. அவரது துணைவியார்.

அடுத்த நாள் கும்புறுப்பிட்டிப் பிரதேசத்துக்குச் சென்றேன்.

மீள் குடியேற்றம் நடைபெற்றுள்ள திரியாய் ஒரு விவசாயக் கிராமம். ஆனால் இந்தக் கிராமத்தில் விவசாயம் செய்வதற்கு உரிய குளமான நீலப் பணிக்கன் குளம் புனரமைக்கப் படவில்லை.

இதனால் அங்கு தொழில் இல்லை. தபாற்கந்தோர் இல்லை நூல் நிலையம் இல்லை. தொலைத் தொடர்பு இல்லை. மின்சாரம் இல்லை. பாடசாலைகளுக்குப் போதிய வளங்கள் இல்லை. போதுமான போக்கு வரத்து வசதியில்லை. பாதை சீராக இல்லை. விவசாயிகள் யானையிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள துப்பாக்கியில்லை. இவ்வாறாக இல்லை என்ற பட்டியல் மிக நீண்டதாக உள்ளது.

திருமலையில் ஏனைய பல இடங்கள் உலகின் ஏனைய பகுதிகள் போல் தேவையான அளவுக்கு என்றில்லாவிட்டாலும் ஓரளவுக்கு வசதியாக இருக்கையில், இவ்வளவு வசதியீனாங்களுக்கும் மத்தியில் குறிப்பிட்ட தொகையினர் அங்கு இருக்கின்றார்கள் என்றால், அது தமது பூர்வீக மண் அதனைக் கைவிடக் கூடாது என்ற அந்த ஒரே நோக்கம் மட்டுமே காரணம்.

நீலப்பணிக்கன் குளத்தை புனரமைக்க ஏற்பாடுகள் நடைபெறவில்லையா? எனக் கேட்டதற்கு ஏன் இல்லை பதின் மூன்றரைக் கோடி ரூபா செலவில் ஜப்பானிய நிறுவனம் ஒன்று இந்த முயற்சியில் ஈடுபட முனைந்தது. இதற்கென திருமலை நகரில் பணிமனை ஒன் றையும் திறந்திருந்தது.

ஆனால் திருமலை மாவட்ட ஜே.வி.பி எம்.பி ஜயந்த விஜே சேகர விடுத்த அச்சுறுத்தலினால், அவர்கள் தமது அலுவலகத்தையும் மூடிக் கொண்டு சென்று விட்டனர் என இங்குள்ள அனைவரும் ஏகோபித்த குரலில் கூறினர்.

சுனாமி அகதிகள் என்ற பெயரில் திஸ்ஸ மஹாராம போன்ற இடங்களிலிருந்து சிங்களவர்களை நகர சபை விளையாட்டு மைதானத்தில் குடியேற்ற முயற்சி எடுத்த அதே பிரகிருதி தான், திருமலை மண்ணுக்கு சொந்தமான அந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கையை சீரழிக்கும் விதமாக இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

அடுத்தது யானைகளால் ஏற்பட்டுள்ள அபாயம் என்னுடைய முப்பது வருசம் பட்ட அனுபவத்தில ஒரு போகத்தில யானை நாலு பேரை அடிச்சிருக்குது எண்டா அது இந்த வருசத்தில தான் என்று கூறினார் அ.சுந்தரராசா.

ஏன் இப்பிடி நடக்குது?

இதுக்கு முதல் என்ன மாதிரியிருந்தது என்று கேட்டதற்கு - புல் மோட்டை, குச்சவெளி இந்த ரெண்டு கிராமத்துக்கும் நடுவில எங்கட கிராமம் இருக்குது. அங்க உள்ள சிங்கள, முஸ்லிம் விவசாயிகளுக்கு துவக்குக் குடுத்திருக்கிறாங்கள். வயலுக்க யானை போனா சுட்டுக் கலைப்பாங்கள். அதுகள் இஞ்சைவரும். அது தமிழ்க் கிராமம். துவக்குத் தரயில்லை. அது தான் இஞ்சை பயிரழிவு கூட. இதால தான் சனம் இஞ்சை மீளக் குடியமர யோசிக்குது எனப் பதிலளித்தார்.

நீலப் பணிக்கன் குளம் குளத்துக் குக் கீழ ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனம் செய்யலாம். கழிவு தண்ணியில 350 ஏக்கர் செய்யலாம். ஆனால் குளத்தின்ர வித்தனில சிறுதானியம் செய்யலாம். வருசம் முழுக்க தொழில் வாய்ப்பு இருக்கும் ஆனால் குளம் திருத்தாததால இப்ப தொழில் இல்லை, என்ன வசதியில்லா விட்டாலும் தொழில் இல்லாட்டிச் சீவிக்கிற தென்ண்டு? அதால ஊரில இருக்க வேனுமெண்டு விரும் புறசனமும் ஊரைவிட்டு நிலாவெளிக்கோ அங்காலேயோ போய் ஏதாவது தொழில் செய்வதும் எண்டு நினைக்குது. ஆறு காளை மறிச்சு குளத்தையும் புனரமைப்சா சிறு தானியமும் கமமும் செய்து கொண்டிருக்கலாம். எனக் குறிப்பிட்டார் அவர்.

தற்போதைய வசதியீனங்களால் திரியாயில் 201 இலிருந்து 77 ஆகவும், கட்டுக் குளத்தில் 205 இலிருந்து 97 ஆகவும், கல்லம்பத்தையில் 41 இலி ருந்து 19 ஆகவும் மீளக் குடியேறி யோர் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதும் தெரிய வந்தது.

மறுநாள் வாழக் கூடிய இடமாகத் தான் இல்லையெண்டா, செத்த பிறகும் நிம்மதியா சுடலைக்குப் போக முடியாமலிருக்குது என்கிறார் சிற்றம்பலம் பிறை சூடி , (வயது 26) எங்கட சுடலையைப் படையினர் தங்கட கட்டுப்பாட்டுக்கை வச்சிருக்கினம். அதால சுடலைக்குள்ள புதைக்க வேண்டாம். முன்னால உள்ள காணிக்குள்ள புதையுங்கோண்டு சொல்லுறாங்கள். சரி எண்டு அதுக்குள்ள பிரேதங்களைக் கொண்டு போனம். ஆனா அது தனியாரின்ர காணி. அதுக்குள்ள ஏன் பிரேதத்தைக் கொண்டு போகினம் எண்டு A.G.A கோவிக்கிறாராம்.


(தொடரும்...)

---

செய்திக்கட்டுரை

தர்ஜனன்

# பழுதடைந்த நிலையில் வடமராட்சி விவசாய நிலம்



சுனாமி கடல் அனர்த்தத்தால் வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரத்தில் அமைந்துள்ள பெருமளவிலான பயிர் நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளதோடு, பயிர்ச்செய்கை நிலங்களில் காணப்படும் கிணறுகளும் உவராக மாறியுள்ளன.

இதனால் வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

சுனாமி கடல் அலை ஊடுருவிச் சென்ற பயிர் நிலங்கள் உவர் நிலங்களாக மாற்றமடைந்ததோடு, பயிர்ச் செய்கை பண்ணப்பட்டிருந்த பயிர்களும் வளர்ச்சியின்றி கருகிச் செல்கின்றன. இதில் வெங்காயப் பயிருக்கே பெருமளவிலான அழிவு ஏற்பட்டு விவசாயிகள் பெரு நட்டம் அடைந்துள்ளனர்.

இதனால் வடமராட்சி கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கையையே நம்பி வாழ்ந்த மக்கள் நிர்க்கதி நிலையில் நாளாந்த வாழ்க்கையையே பெருஞ்சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தின் போது இடம் பெயராது, பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தாது போதிலும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்தவர்களுக்கு அந்தத் தொழில் பாதிப்படைந்து வறுமையில் வாடுகின்ற போதும், நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை .

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் முடிவுற்ற நிலையில், இந்த விவசாயிகளுக்கு எந்தத் தரப்பாலும் எந்தவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

இதனைக் கண்டித்து அண்மையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒன்று திரண்டு பருத்தித்துறைப் பிரதேச செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை நடத்தி மகஜரையும் கையளித்தனர். ஆனாலும் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை, இன்பருட்டி, எரிஞ்சம்மன் கோவிலடி, பொலிகண்டி, வியாபாரி மூலை உள்ளிட்ட பிரதேசங்களில் அதிகமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி விவசாயிகளே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வறுமை நிலையிலும் வாழ்கின்றனர்.

அரச அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் இயன்ற வரை உதவ வேண்டும். அதைவிட்டு அரசாங்கம் தருவதைத் தான் நாங்கள் தரலாம் என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்கள் உணவுக்காக கஸ்டப்படும் நிலையில், அறிக்கைகள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை என விவசாயிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

காலங்காலமாக வெள்ள அனர்த்தம், இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படாதது போலல்லாது, தற்போதாவது நிவாரணம் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதவி வழங்கும் தொண்டரமைப்புக்கள் உதவி வழங்க முன் வருகின்ற நிலையில், அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால் பாதிக்கப்பட்ட பல மக்கள் நிவாரணம் பெற முடியாமற் போனது என்பது மறைக்கப்பட முடியாத உண்மையாகும்.

இதைவிட தொழில் வாய்ப்பை இழந்த மக்களுக்குள் சிறுபான்மையினராகிய விவசாயிகள் விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எல்லோருமே பாராமுகமாக இருந்து வருகின்றனர்.

இந்த விவசாய மக்கள் மகஜர் ஒன்றை கையளித்த போதும், பிரதேச செயலகத்தால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எல் லாத் தரப்பினராலும் 'உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்ற உறுதி மொழியே வழங்கப்படுகின்றது.

ஆனால் ஒரு சிறு உதவி கூட தமக்குக் கிடைக்கவில்லை என இந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்கள் விடயத்தில் விவசாயத் திணைக்களங்கள் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுனாமி அலை ஊடுருவிச் சென்ற விவசாய நிலங்களில் ஏறக்குறைய ஒரு வருடத்திற்கேனும் விவசாயம் செய்ய முடியாது, இவர்கள் வேறு நிலங்களில் விவசாயம் செய்வதற்கும் வசதியில்லை. எனவே மாற்றுத் தொழில் ஒன்றைச் செய்யவோ அல்லது அந்த நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றவோ சம்பந்தப்பட்டவர்கள் உரிய உதவிகளை வழங்க வேண்டும்.

இல்லையேல் அவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின் தள்ளப்படுவர். மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட, எடுக்கும் காலம் வரையில் அரச நிவாரண உதவிகள் வழங்கப்பட்டால் தான் அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியும்.

சுனாமி அனர்த்தத்தினால் விவசாயத் தொழில் பாதிப்படைந்த நிலையில், நிவாரணங்களும் கிடைக்கப் பெறாத நிலையில், வறுமையில் வாடும் சிறுபான்மை விவசாய மக்களுக்கு அரச அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட தரப்பினரும் மனித நேயத்தைக் கருத்திற்கொண்டு உடனடியாக உதவி புரிய முன் வர வேண்டும்.

அவர்கள் மீண்டும் போராட்டம், பேரணி, மகஜர் கையளிப்பு என்ற நிலைக்குத் தள்ளப்படக் கூடாது கௌரவ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வார்களா?

# பாப்பரசரின் இறுதிச் சடங்கு வெள்ளிக்கிழமை இடம்பெறும்!

(வத்திக்கான்)

உலகளாவிய கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான பாப்பரசர் இரண்டாவது ஜோன்போலின் இறுதிச் சடங்கு நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


பாப்பரசரின் இறுதிச் சடங்கு நிகழ்வை எப்போது நடத்துவது என்பதனை தீர்மானிக்க நேற்றுக் காலை 10 மணிக்கு கர்தினால்களின் கூட்டம் வத்திக்கானில் இடம்பெற்றது. இதன்போதே பாப்பரசரின் இறுதிச் சடங்கு நிகழ்வை வெள்ளிக்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டது.


நாளை மறுதினம் இடம் பெறவுள்ள பாப்பரசரின் இறுதிச் சடங்கு நிகழ்வில் பங்கேற்பதற்காக 20 லட்சம் பேர் வத்திக்கானில் கூடுவரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பாப்பரசரின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்கள் தங்குவதற்கான இடவசதி மற்றும் பாதுகாப்பு எற்பாடுகளை இத்தாலிய அரசு மேற்கொண்டு வருகின்றது.

பாப்பரசரின் உடல் வத்திக்கானிலுள்ள அப்போஸ்தல அரண்மனையில் உயர்ந்த பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடல்மீது சிவப்பு மற்றும் வெண்ணிற ஆடை கள் போர்த்தப்பட்டுள்ளன. பீடம் வெல்வெட் துணியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வெல்வெட் தலையணையில் வலது பக்கம் சற்று தலை சாய்ந்த நிலையில் பாப்பரசரின் உடல் வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பீடத்தின் இரண்டு பக்கமும் சுவிஸ் மெய்க்காவலர்கள் இருவர் நிறுத்தப்பட்டுள்ளனர்.


பாப்பரசரின் உடல் மீது நேற்று முன்தினம் புனித் தீர்த்தம் தெளிக்கப்பட்டு இறுதி பிரார்த்தனை படிக்கப்பட்டது. அவரது ஆத்மாசாந்தி அடைவதற்காக நேற்று முன்தினம் வத்திக்கானிலுள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் திருப்பலி பிரார்த்தனை நடந்தது. இதில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

பாப்பரசரின் உடலுக்கு கத்தோலிக்க குருமார்கள் கர்தினால்கள், இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லூஸ் கோணி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.


வத்திக்கானில் சனத்திரள்


பாப்பரசரின் இளவயதுத் தோற்றங்கள்






தலாய்லாமாவுடன்


அன்னை தெரேசாவுடன்

# புதிய பாப்பரசர் நியமனத்திற்கு 10 கர்தினால்கள் களத்தில்!



புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்படும்வரை பொறுப்புக்களை நிறைவேற்ற தற்காலிக கத்தோலிக்க தலைவராக கர்தினால் எட்வேட் மார்ட்டினாஸ் சமாலோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை புதிய பாப்பரசர் எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இதற்கு இந்தியர் உட்பட 10 கர்தினால்களின் பெயர்கள் அடிபடுகிறது. புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்காக உலகம் முழுவதிலுமிருந்து கர்தினால்கள் வத்திக்கான் சென்றுள்ளனர்.

பாப்பரசரின் இறுதிச்சடங்கு நிகழ்வுகள் முடிந்த பின்னர் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் பணி தொடங்கும். அதாவது 15 நாட்களுக்குப் பின்னர் 17 ஆம் திகதி புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படுவார்.

உலகம் முழுவதும் 132 கர்தினால்கள் தற்போது உள்ளனர். ஆனால் 120 கர்தினால்கள் மட்டுமே புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான வாக்களிப்புக்குத் தகுதிபெற்றுள்ளனர். மற்றவர்கள் 80 வயதைத் தாண்டியவர்களாவர். இந்தியாவில் கூட 5 கர்தினால்கள் உள்ளனர். இவர்களில் மூவர் மட்டுமே வாக்களிக்கத் தகுதியானவர்கள்.

புதிய பாப்பரசர் பதவிக்கு இந்திய பாப்பரசர் இவான் டயஸ் உட்பட பத்து பேரின் பெயர்கள் அடிபடுகின்றது. அந்த 10 பேரின் பெயர் விபரமும் வருமாறு:-

நைஜீரியாவைச் சேர்ந்த கர்தினால் பிரான்சிஸ் அரின்சே (வயது 75) 20 வருடங்களாக கர்தினால் பதவியில் உள்ளார். இஸ்லாமிய மதத்தவருடன் சுமுக நிலைக்கு வித்திட்டவர். இவர் புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டால், 1500 வருடங்களில் முதல் ஆபிரிக்க பாப்பரசராக இவர்தான் இருப்பார்.

ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த இரசாயனவியல் நிபுணரான கர்தினால் ஜோர்கீ மாரியோ பெர் ஜோக்ளியோ (வயது 69). மிகவும் எளிமையானவர். இவருக்கென சொகுசு மாளிகை இருந்தும் சாதாரணமான சிறிய வீட்டில் வசிக்கின்றார். இவர் பஸ்ஸிலேயே பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

கொலம்பியாவைச் சேர்ந்த கர்தினால் டேரியோ கொஸ்ட்ரியல் லோன் ஹோவாஸ் - கொலம்பியா, லத்தீன் அமெரிக்கா, வத்திக்கான் நகரில் புகழ் பெற்றவர். லத்தீன் அமெரிக்க பிஷப் குழுக்களின் சம்மேளனத்தின் செயலாளராக இருந்தவர்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த கர்தினால் காப்பிரைட் டேன்னீல்ஸ் (வயது 72) ஐரோப்பிய நகரங்களில் கத்தோலிக்க நம்பிக்கையை விதைக்க அரும்பாடுபட்டவர்.

இந்திய - மும்பாயைச் சேர்ந்த கர்தினால் இவான் டயஸ் (வயது 69) இவர் ஹிந்தி, ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு, ஸ்பானிஷ் உட்பட 16 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். சிறந்த நிர்வாகி.

இத்தாலியைச் சேர்ந்த கர்தினால் டியோந்த டெட்டா மான்சி (வயது 71) ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் (வயது 78) ஹொண்டுராஸ் நாட்டைச் சேர்ந்த கர்தினால் ஒஸ்கர் ஆட்ணரஸ்ரோட்டர் கெஸ் மாரடியாகா (வயது 59) செக் குடியரசைச் சேர்ந்த கர்தினால் கிறிஸ்தோப் சோன்பார்ன் (வயது 63) பிரேசிலைச் சேர்ந்த கர்தினால் கலாடியோ ஹிமெஸ் (வயது 67) ஆகியோராவார்.

## உலக நோக்கு

### அமெரிக்கப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள

# அபுகிராப் சிறைச்சாலையின் மீது கிளர்ச்சிவாதிகள் பெரும் தாக்குதல்



ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கப் படையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள அபுகிறாப் சிறைச்சாலை மீது கிளர்ச்சிவாதிகள் நடத்திய பெருமெடுப்பிலான தாக்குதலில் 44 அமெரிக்கப் படையினர் மற்றும் 12 சிறைக்கைதிகள் காயமடைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைக்கு வெளியே முதலில் கார்க்குண்டுத் தாக்குதலையும், இதனையடுத்து மற்றொரு கார்க்குண்டுத் தாக்குதலையும் பொழுதுசாயும் நேரத்தில் நடத்திய கிளர்ச்சிவாதிகள், பின்னர் சிறைச்சாலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் கிரனைட் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

கிளர்ச்சிவாதிகளுடன் சுமார் ஒரு மணி நேரமாகப் போரிட்ட அமெரிக்கப் படையினர், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஹெலிகொப்ரர்களினதும், ராங்கிகளினதும் உதவியைக் கோரி, அவைகள் சம்பவ இடத்திற்குச் சென்ற பின்னரேயே நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது ஒரு கிளர்ச்சிவாதி கொல்லப்பட்டதாகவும், இதன் பின்னர் பல கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் லெப்.கேணல் கைருடிசில் தெரிவித்தார். அத்துடன் காயமடைந்த அமெரிக்கப் படையினரில் சிலரே கடும் காயங்களுக்குள்ளானதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் சுமார் 40 கிளர்ச்சிவாதிகள் ஈடுபட்டிருந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இவ்வாறான ஒரு தாக்குதல் நடைபெறும் என்பதை எமது புலனாய்வுத் தகவல்கள் மூலம் ஏற்கனவே அறிந்தே இருந்தோம். ஆனால் இவ்வாறான ஒரு பெரிய தாக்குதல் இரவில் நடைபெறுமென நாம் உண்மையாகவே எதிர்பார்க்கவில்லை எனவும் கை ருடிசில் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் அணு விஞ்ஞானிகள் பின்லேடனைச் சந்தித்தனராம்!

## அமெரிக்கப் புலனாய்வுத்துறை புதிய தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணு விஞ்ஞானிகளான அப்துல் காதிர்கானும், சுல்தான் பஷிருதீன் மெக்மூத்தும் பின்லேடனைச் சந்தித்துப் பேசி இருந்ததை அமெரிக்க புலனாய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.

அதோடு தலிபான்களின் பேரணிகளிலும், கூட்டங்களிலும் அவர்கள் கலந்துகொண்டிருந்ததும் தெரிய வந்தது.

பாகிஸ்தானின் அணு ஆயுதத் தந்தை என்று கருதப்பட்டவர் அப்துல் காதிர்கான். இவரது நம்பிக்கைக்குரிய அணு விஞ்ஞானி சுல்தான் பஷிருதீன் மெக்மூத். அவர் அணுசக்தி குழுத்தலைவராகவும் இருந்தார். ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொண்டு அவர் காபூல் நகரில் ஒரு மையத்தை ஏற்படுத்தினார்.

2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23 ஆம் திகதி அவர் மையத்தில் இருந்தபோது கைதானார். அவரது மையத்தில் அமெரிக்க புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏ. சோதனை நடத்தியது.

இதன்போது அணு ஆயுதம் தயாரிப்பது, பராமரிப்பது ஆகியவை தொடர்பான தகவல்கள் அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன் லஸ்கர் - இ - தொய்பாவுக்கும் அணு விஞ்ஞானிகளுக்கும் இடையே இருந்த கடிதத் தொடர்புகளுக்கான ஆதாரமும் கிடைத்தது.

லஸ்கர் - இ - தொய்பாவின் கூட்டங்களிலும், பேரணிகளிலும் 2 விஞ்ஞானிகளும் கலந்துகொண்டதும் தெரியவந்தது.

பின்லேடன் மற்றும் அல் - கொய்டா உயர்மட்டத் தலைவர்களை இந்த 2 அணு விஞ்ஞானிகளும் சந்தித்துப் பேசியதும் தெரியவந்தது.

அல்கொய்டா பயங்கர வெடிகுண்டுகளைத் தயாரிக்க, இந்த அணு விஞ்ஞானிகள் உதவி செய்ததாகவும் கூறப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொதுக்கட்டமைப்பின் மூலம் புலிகளுக்கு சட்டரீதியான அதிகாரம் கிடைக்குமாம்

## எல்லாவல மேதானந்த தேரர் சொல்கிறார்

(கொழும்பு)

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால் - புலிகளுக்கு சட்டரீதியான அரசை வழங்குவதாக அமைந்துவிடுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஹோமகமவில் இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் தொழிற் சங்கக் கூட்டத்தின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டையும், இனத்தையும் புத்தரின் புத்த சாசனத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

1948 இல் இருந்து 2005 வரை இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வந்தன. இதனால் நாட்டில் புத்த சாசனத்துக்கு எதிரானவர்கள் வலுப் பெற்றார்கள்.

புலிகள் அமைப்பு இந்த நாட்டின் மக்கள் வாழ்வை இரண்டு தசாப்த காலமாக அழித்தனர். இந்த நாட்டு அரசியல்வாதிகள் புலிகள் அமைப்பு விழவிழ அவர்களுக்கு கரம் கொடுத்தவர்களாவர்.

சமாதான காலத்துக்குச் சென்றபோது புலிகள் உயிரற்று இருந்தார்கள். ஆனால், சமாதான ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் பலவழிகளிலும் முன்னேற்றமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# கேணல் பால்ராஜ் வன்னி திரும்பினார்

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் - நேற்று திருகோணமலையிலிருந்து இராணுவப் பாதுகாப்புடன் வன்னிக்குத் திரும்பியுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு சம்பூரிலிருந்து கேணல் பால்ராஜ் மற்றும் போராளிகள் - வன்னிக்கான பயணத்தை ஆரம்பித்தனர்.

இவர்களை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் தளபதிகள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இவர்களுக்கு வழித்துணை வழங்கினர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கட்டைபறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியிலிருந்து இராணுவ வாகனப் பாதுகாப்புடன் வன்னி நோக்கி அவர்கள் பயணத்தை ஆரம்பித்ததாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன. (04)

# பாப்பரசர் மறைவுக்கு இன்று துக்கதினம்!

(கொழும்பு)

பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலின் மறைவை முன்னிட்டு இன்று இலங்கையில் தேசிய துக்கதினம் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்று சகல அரச நிகழ்வுகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு - அரசாங்க தனியார் நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள வத்திக்கான் செல்லவுள்ளனர்.

# ஹெரோயின் விற்ற இரு பெண்கள் கைது

(வவுனியா)

வவுனியாவில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்து கொண்டிருந்த இருபெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல் வவுனியா தோணிக்கல் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரிடம் போதைப் பொருளை வாங்கிய நபர் ஒருவர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து சிறு பைகளினால் பொதி செய்யப்பட்ட 12 ஹெரோயின் பைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட பெண் கொடுத்த தகவலையடுத்து இந்தப் பகுதியில் போதைப் பொருட்களை விற்பனைசெய்த மேலும் ஒரு பெண் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். (03)

# ஜப்பான் நிதியுதவி

வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளுக்காக ஜப்பான் 40 கோடி ரூபாவினை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ளது.

இந்த நிதியில் 5 கோடி ரூபாவை வடக்கிலுள்ள மீனவர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகளில் ஈடுபடுவதற்கு, குறைந்த மாதாந்த கொடுப்பனவுகளில் பணியில் ஈடுபடுத்த 500 பேரை இணைக்கவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (தே)

## அன்பு...

அவர்களது ஆன்மாவில் நம்பிக்கை ஒளிர்விடச் செய்கிறார் என்று தனது கடைசி செய்தியில் பாப்பரசர் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தி வாசிக்கப்பட்டதும் அங்கு கூடியிருந்த மக்கள் கண்ணீர் விட்டனர்.

## ஜேர்மனியில்...

டிருந்தனர். இவர்களில் அரைவாசிப் பேர் இலங்கையர்களாவர்.

பிரார்த்தனை இடம் பெற்றுக் கொண்டிருந்த போது - புளொட் இயக்க உறுப்பினரான 25 வயதுடைய இளைஞர் ஒருவர் வாளுடன் உட்புகுந்து அங்கிருந்தவர்களைக் கண்மூடித்தனமாக வெட்டினார்.

இந்தச் சம்பவத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த அரியசிகாமணி இந்துமதி என்ற 43 வயது பெண் கழுத்தில் வெட்டுக் காயம் ஏற்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவரது கணவனான 52 வயதுடைய அரியசிகாமணி மற்றும் பெண் உட்பட மூவர் படுகாயமடைந்தனர். காயமுற்ற பெண்ணின் கை ஒன்று துண்டிக்கப்பட்டதாகவும் - இவரது நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதல் தனிப்பட்ட காரணங்களாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும்-

தாக்குதல் நடத்திய நபரை தாம் கைது செய்திருப்பதாகவும் - அவரிடமிருந்து 9 மி.மீ பிஸ்டல் ஒன்றை பயன்படுத்தாத நிலையில் மீட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட இளைஞர் 25 வயதுடையவரெனவும் இவர் புளொட் உறுப்பினர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

ஈஸ்டர் தினத்துக்கு முதல் நாள் இந்தத் தாக்குதல் நடத்தப் போவதாக குறிப்பிட்ட இளைஞர் முன்னர் எச்சரித்ததாகவும் ஜேர்மன் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

பிற்பகல் 3.40 மணியளவில் தேவாயலத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை தொலைபேசித் தகவல் மூலம் கேள்வியுற்ற பொலிஸ் 3.48 மணிக்கு அங்கு சென்றபோது - கண்டதுண்டமாக வெட்டப்பட்ட உடற்பாகங்கள் சிதறிக் கிடந்ததாக - ஸ்டுட்காட் பொலிஸ் பெண் பேச்சாளர் கிபிலி அல்போன் தெரிவித்தார்.

தேவாலயத்துக்குள் பொலிஸார் நுழைந்தபோது - கொலையாளியான இளைஞர் வாளுடன் வாசலில் நின்றதாகவும் - பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜேர்மனியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவத்திற்கு சர்வதேச ஊடகங்கள் யாவும் முக்கியத்துவம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை முடிவுகள் நாளையே!

(கொழும்பு)

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் நாளைய தினமே வெளியிடப்படும் என - பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்தார். இணையத் தளத்தில் doenet.com என்ற முகவரியில் பார்வையிடலாம்.

# இன்றும் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் கடந்த இரண்டு நாட்களாகப் பெய்துவரும் மழை இன்றும் தொடரும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாகக் கடந்த இரு தினங்களாக யாழ்.குடாநாட்டில் மழை பெய்து வருகின்றது. நேற்று காலை 9.00 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்திற்குள் 18.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி குடாநாட்டில் பதிவாகியுள்ளது.

அத்துடன் இந்த வருடம் 66 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி மட்டுமே பதிவாகியுள்ளது.

# நாடு முழுவதும் திடீர் மின்தடை!

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்றுப் பிற்பகல் திடீரென மின்சார விநியோகம் தடைப்பட்டது.

பிற்பகல் 3.55 மணிக்கு தடைப்பட்ட மின்விநியோகம், மாலை 5.30 மணிக்கே - சுமார் ஒன்றரை மணி நேரத்தின் பின் வழமைக்குத் திரும்பியது. தொழில்நுட்பக்கோளாறினால் இந்தநிலை ஏற்பட்டதாகவும் - இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாகவும் மின்சார சபை அறிவித்துள்ளது.

# அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு!

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாள் முதல் இன்றுவரை நிவாரணப் பணிகளில் மேலதிகமாக ஈடுபட்ட அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்தக் கொடுப்பனவை வழங்குவது தொடர்பாக 'நிதியமைச்சருக்கும், பொது நிர்வாக அமைச்சருக்குமிடையே கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான இந்தக் கொடுப்பனவை எப்போது வழங்குவதென்பது தொடர்பாக எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படுமென நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (தே)

## மக்கள்...

செல்வதா இல்லையா என்பது பற்றி தெளிவான தீர்மானத்தை எடுப்பதைத் தவிர வேறெந்த நடவடிக் கையையும் எடுக்கமுடியாத நிலை இருக்கிறது.

தற்போதைய நிலைவரத்துக்கு அமைய போர்நிறுத்தத்தைத் திருத்த வேண்டிய தேவையிருந்தாலும், அது போன்ற செயற்பாட்டுக்குச் செல்லும் போது மீண்டும் யுத்தம் ஏற்படலாம்.

புலிகள் போன்ற குழுவொன்றுக்கு விமான ஓடுதளம், இலகுரக விமானங்கள், இராணுவம், பொலிஸ் ஆகியவற்றை வைத்திருப்பது இயலாத காரியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் விரைவில் கூடும்!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் விரைவில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்புக்களின் வேண்டுகோளை ஏற்றே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தெரிவித்தன.

1994 பொதுத்தேர்தல், 1994,1999 ஜனாதிபதித் தேர்தல்களின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தன. ஜே.வி.பியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்ட பின்னர் - பொதுஜன ஐக்கிய முன்னணி செயலிழந்தமை குறிப்பிடத்தக்து. (01)

# 23 தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

கடலுக்கு நடுவிலுள்ள மணற்திடலில் இந்திய மீனவர்களால் இறக்கிவிடப்பட்ட நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 23 தமிழ் அகதிகளும் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது, அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிபதி அப்துல்லா - அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இந்த 23 தமிழ் அகதிகளும் மன்னாருக்கு வரும் நோக்கில், இந்திய மீன்பிடிப் படகுகளில் பயணத்தை மேற்கொண்டனர். எனினும், ஞாயிறு அதிகாலை இந்திய மீனவர்கள் இந்த 23 பேரையும் கடலின் நடுவேயுள்ள மணற்திட்டில் இறக்கிவிட்டு, மன்னார் கரை இதுதானெனத் தெரிவித்துச் சென்றனர்.

ஆனால், தாம் மணற்திட்டில் இறக்கிவிடப்பட்டுள்ளதை பின்னரே அகதிகள் உணர்ந்துகொண்டனர். இவர்களை இறக்கிவிடுகையில், ஒரு சிறுவனை இந்திய மீனவர்கள் தூக்கி வீசியதில் அவன் கடுங்காயங்களுக்கு இலக்கானான்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் பகல் 12 மணியளவில் கடற்படையினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, நிர்க்கதியாக இறக்கிவிடப்பட்ட அகதிகளை தமது படகில் ஏற்றிவந்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் - உடனடியாகவே காயமடைந்த சிறுவனை தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இந்த அகதிகளில் 4 சிறுவர்கள், 7 பெண்கள், 12 ஆண்கள் அடங்கியிருந்தனர்.

# லேக் ஹவுஸ் நிர்வாகம் சரத் அமுனுகம வசம்!

அரச சார்பு ஊடக நிறுவனமான லேக் ஹவுஸ் நிர்வாகம் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருந்து பறிக்கப்பட்டு நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆளும் அரசைக் கவிழ்க்க ஜே.வி.பியுடன் இணைந்து மங்கள சமரவீர திட்டம் தீட்டிவருவதாகக் கூறி அவரை அண்மைக்காலமாகவே ஜனாதிபதி சந்திரிகா ஒதுக்கிவருகிறார்.

அண்மையில் மங்கள சமரவீர வெளிநாடு சென்றிருந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா ஊடகத்துறையை நிர்வகிக்க சிறப்புக்குழு ஒன்றை அமைத்து அதில் சில துணை அமைச்சர்களை இடம்பெறச் செய்திருந்தார்.

ரூபவாஹினிக்கும் - மங்கள சமரவீரவுக்கும் முரண்நிலை இருப்பதாகக்கூறி இந்தக் குழுவைச் சந்திரிகா நியமித்தார்.

சந்திரிகாவின் இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே அமுனுகமவிடம் லேக் ஹவுஸ் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமையன்று கண்டியில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அமுனுகம - லேக் ஹவுஸ் நிர்வாகப் பொறுப்பு எதிர்வரும் வியாழக்கிழமைமுதல் தம்மிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் இது குறித்த விசேட உத்தரவை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## படையினரின்...

பாதுகாப்பு கேந்திர நிலைகளின் உள்ளகத் தொலைபேசிகளின் உரையாடல்களை புலிகள் ஒட்டுக்கேட்க ஆரம்பித்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன், தற்பொழுது திருகோணமலை - வெருகல் எல்லையில் 150 அடி உயரமுள்ள தொடர்பாடல் கோபுரம் ஒன்றை அமைத்து, ஒட்டுக்கேட்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை புலிகள் எடுத்துவருகின்றனர்.

இதன்மூலம் பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையில் இடம்பெறும் முக்கிய உரையாடல்கள் புலிகளுக்குத் தெரிய வருவதால், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவு - அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை - வெருகல் எல்லையில் புலிகள் நிர்மாணித்துள்ள கோபுரம்மூலம் மட்டக்களப்பு மாவட்ட எல்லை வரை புலிகளின் குரல் வானொலிச் சேவையை விஸ்தரிக்கவுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (தே)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.